உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௩௬] பிரமாதி ஹூ ஆடி மீ [பகுதி-௯.
Vol. 36. July—August 1939. No. 9.

## கம்பராமாயண சாரம்

[௩௩௮-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

### அனுமராவணர் போர்.

அனுமான் இராவணனைநோக்கி, 'சுக்கிரீவன் சோர்வொழிந்து போர்தொடங்கும்வரை பொழுதுபோக்காக என்னுடன் பலவகைப் போர்புரிவாயோ' என, அவன் 'போருக்கு வருகிறாயோ? வருவாயானால், வா' என, இவன் 'வருகிறேன்' என்பதை (செப்புதலாலன்றிச் செயலால் தெரிவிப்பானாய்) ஒரு மலையைப் பிடுங்கி அவன்மேலெறிந்தான். அவன் அதைப் பத்தம்புகளெய்து ஆயிரந் துண்டங்களாக்கினான். இவன், வேறொருமலையையெறிய, அது அதைத் தகர்க்க அவன் எய்த அம்புகளைக் கடந்துசென்று, அவன் தோள்வளையைத் தாக்கித் தூளாக்கித் தானும் தூளானது. அவன் தன்மீது திரும்பவும் எறியவிரும்பி ஒரு மலையைப் பேர்த்துக் கொண்டிருந்த இவனுடைய கையிலும் மார்பிலும் நுழைந்து மறைந்திடும்படி பத்தம்புகளெய்தான்.

இவன், அவைகளை பேற்றுத் தாங்கி இறுமாந்துநின்றான். 'இவ்வாறு சமாளித்தல் வேறு யாராலாகும்?' என்று விண்ணோர் வியந்து பாராட்டினார்கள். அப்போது, இவன் ஒரு பெரு மரா மரத்தை வேரோடு பிடுங்கிச் சுழற்றியெறிந்தான். அது, அவன்

தேர்ப்பாகனது தலையைத் தரையில்வீழ்த்தி வேறுபல இராக்கதரையும் மடிந்துவிழுந்திடச்செய்தொழிந்தது. அதனைக் கண்டு வெகுண்டு, அவன் எய்த நூறுபாணங்கள் நுழைய, ஆறுபோல் இரத்தம்பெருக, இவன் துன்புற்றுச் சோர்வடைந்தான்.

## இராவணன் வானரசேனையை முறியடித்தல்.

அநுமான் சோர்ந்ததுகண்டு, மற்ற வானரவீரரை நோக்கி, இராவணன், 'வாய்க்குவந்ததைச் சொல்லும் சொல்லாலும், பல்லாலும், தோளாலும், மார்பாலும், காலாலும், வாலாலும் சண்டை செய்கின்ற அற்பக்குரங்குகளாகிய உங்களை எதிரிகளாகப் பொருட்படுத்திப் பொருவது எனது பேராண்மைக்குத் தீராவசையாமென்றிருந்தேன். உங்களைக் கொல்ல வில்லையெடுத்தேனானல் உங்களுள் ஒருவனாவது உயிரிழவாது, உய்வானோ?' என்று கூறி ஆயிரம் ஆயிரமாக அம்புகளெய்தான். காற்றால்தாக்கப்பட்ட கடல்போல, வானரசேனாசமுத்திரம் சிதறிவிட்டது.

## இலக்குமண ராவணர் போர்.

வானரசேனை சிதறியதைக்கண்டு (பொன்னிறமுடைய) இலக்குமணன், 'என் அம்புக்கு இலக்கு இராவணன்' என்று சொல்லிக்கொண்டு, பொன்மலை வில்லேந்திவந்தாற்போலப் போர்க்களத்திற் புகுந்து தன் வில்லை நாணெறிந்தான். அதன் ஓசையைக் கேட்ட அரக்கர், சிங்கமுழக்கங்கேட்ட யானைகள்போலத் திடுக்கிட்டார்கள். இலக்குமணனுடைய, கூற்றுவன் புருவம்போல வளைந்த வில்லொலி கேட்ட இராவணன், அதிசயித்துத் தலையசைத்தான். இலக்குமணனுடைய பாணங்கள், இராவணனது சதுரங்கசேனையைத் தாக்கியழிக்க, இரத்தவெள்ளம் பரந்தலுற்றது. 'இவன் நம் மிறைவனை அணுகவிடுவோமேல், நம் வீரம் என்னாம்' என்று இராக்கதவீரர், ஒரு பெருவெள்ளலை இரவலர் பெருந்திரள் எதிர்ந்தாற்போலக் கூட்டத்தின்மேற் கூட்டமாக இலக்குமணனை எதிர்ந்து படைக்கலங்களை ஏவினார்கள். அவன் தன்

அம்புகளால் அவர்கள் எய்த அம்புகளையும் எறிந்த பிற படைக் கலங்களையும் கண்டதுண்டங்களாக்கி, எமன் உயிர்களைத் தின்று தேக்கெறிந்து மேற்கொண்டு தின்னுதலை வெறுக்குமாறு, அவர்களை அளவின்றிக் கொன்றான். அதனால், இரத்த ஆறுகள், பெருகிப் பிணக்குவியல்களால் தடைப்பட்டுக் கடலுக்குச் செல்லாது திரும்புவனவாயின.

இலக்குமணன் மிகுவிரைவாக அம்பெய்ததனால், அவன் அம்புகளை எடுப்பதையும் தொடுப்பதையும் விடுப்பதையும் இமையோர் காணவில்லை. அவர்கள் கண்டது, அவ்வம்புகள் கொன்றுகுவித்த பிணப்பெருங்குவியல்களையே. இலக்குமணனுக் கெதிராக உபயோகித்த இராக்கதருடைய வில்லும் அம்பும் வேலும் சூலமும் முதலிய படைக்கலங்களெல்லாம் ஒன்று நூறாக அற்றுப்போயின; அன்றி அறுதொழிந்தது ஒன்றுமில்லை. இலக்குமணனோடு போருக்குவந்த தேருக்கும் யானைக்கும் குதிரைக்கும் காலாட்கும் கணக்கில்லை. அவன் அவைகளனைத்தையும் அலையுறுதலும் நிலையுறுதலும் அற்றுக் கிடையுறுமாறு கொலைத்தான்.

வெறிகொண்ட எமன்போலத் தன் சேனைமுழுவதையும் கொல்லும் இலக்குமணனெதிரே, இராவணன் தன் தேரைச் செலுத்தித் தீப்பொறிபறக்க இலக்குமணனைநோக்கிச் சீறிநின்றான். இலக்குமணன் 'சீதாதேவியைக் காத்துநின்ற என் காவல் வலிமையை வஞ்சகத்தினால் தொலைத்த கள்வனே!, இனி உனக்குப் போக்கில்லை'யென்று புகன்று, அம்புகளைத் தொடுத்துவிடுத்தான். இராவணன், அவைகள் தன்னையடையுமுன் அம்புகளால் அறுத்தான். 'முன் எய்தவை மெலியவை. வலிய இவைகளை அறு, பார்ப்போம்' என்று இலக்குமணன் சரமாரி சொரிந்தான். இராவணன், அந்த அம்புகளைத் தன் அம்புகளால் விலக்கிவிட்டு, மேலும் அம்புகளெடுக்கமுடியாதபடி இலக்குமணனுடைய அம்பறாத் தூணியை அறுத்துத் தள்ளினான். அந்தச்சமயத்தில், இராவணன் அம்பு தைத்துச் சோர்வுற்றிருந்த அனுமான் தெளிவுற்றான்.

## இரண்டாவது அநும ராவணர் போர்.

தெளிவுற்ற அநுமான்; (முன் சுக்கிரீவன் உணர்வற்றபோது உதவியதுபோல, இப்போது, இலக்குமணன் அம்புப்புட்டிலற்ற தருணத்தில் உதவுவானாய்) இராவணன் தேரெதிரே சென்றுநின்று 'இலக்குமணனுடன் செய்யும் இந்த விற்போரை விடு. என்னுடன் மற்போர் தொடு. முன் திரிலோகங்களையும் செயித்தாயென்றாலும், இன்று நீ அழிவது நிச்சயம்' என்றுகூறி, வாமனன் திரிவிக்கிரமனாக வளர்ந்ததுபோலத் தன் சிறிய உருவம் அப்பெருமான் போலப் பெரிய உருவமாக வளர்ந்து, 'என்னைப்பார். நான் சொல்வதைக்கேள். நான் குத்த, நீ யிறவாவிடில், என்னைக் குத்து. உன் குத்தால் யான் இறவாவிடில், என்றும் உன்னொடு பொருவதில்லை' என்றான். இராவணன், 'வீரர்கூறத்தக்கதைக் கூறினாய். என்னை வெல்ல வல்லையல்லையாயினும், எவரும் எதிர்நிற்கமாட்டாத என்னோடு பொருதாய் என்ற புகழ், பூமியுள்ளவரையும் நிலையாயுள்ளதாம். திக்குவிசயஞ்செய்து திரிலோகங்களையும் செயித்த யான் உன்னோடு பொருதேன் என்றால் என்புகழுக்கு ஈனமாம். ஆயினும், ஏகனாய் நிராயுதனாய்ப் பாதசாரியாய் இருகையே உடையனாக உள்ள நீ, சேனாசமேதனாய்ச் சர்வாயுதனாய் இருபதுகையுடையனாயுள்ள என்னோடு குத்துச்சண்டைக்குத் துணிந்து நின்றதனால், நிகரற்றவனான உன்னோடு பொருவேன். தாமதஞ்செய்யாது குத்துவாயாக' என்றான்.

## இருவரும் ஒருவரையொருவர் குத்தல்.

உடனே, அநுமான், இராவணன்றேரில் ஏறித் தன் முழு வலியையும் பிரயோகித்துக் குத்தினான். அதனால் திக்குவிசய காலத்தில் திசையானைத்தந்தங்கள் மார்பிற்பாய்ந்து முறிந்திருந்தவை முதுகுவழியாக உருவி, அவன்புகழ் சிந்தினாற்போல உதிர்ந்தன. அதுகண்ட வானோர், ஆர்த்தார்கள், அலர்மாரி தூர்த்தார்கள்; அரக்கர் வேர்த்தார்கள். வானரர் மகிழ்ந்து கூத்தாடினார்கள்; அந்தக் குத்தினால், இராவணன் மூர்ச்சையடைந்தான்.

அப்போது அவனுடல், கூடு விட்டுக் கூடுபுகுந்த யோகியின் (உயிர் நீங்கப்பெற்ற) உடல்போன்றது. சிறிதுநேரம் சென்றபின், அவன் மூர்ச்சைதெளிந்தான். அப்போது, அவனுடல், தான்புகுந்த கூட்டினின்று தன்கூட்டுக்குத் திரும்பிய யோகியின் (உயிர்திரும்பப் பெற்ற) உடல்போன்றது.

மூர்ச்சைதெளிந்த இராவணன், அனுமானை வியந்துநோக்கி, 'ஆண்மையென்று பாராட்டப்பட்டதொன்று உண்டன்றே. அது, உன்னிடத்தேதான் உள்ளது. உன்னைநோக்கப் பிறவீரர்கள் பேடிகளே. உலகேழையும் வென்றோனாய்ப், பிரமனுக்கும் சலியாதவனாய், என்றும் வலிமையென்பதையே அறிந்த யான், இன்று உன்னால் மெலிவென்பதை யறிந்தேன். அதனால், என்னை வென்றாயானாய். வீர! இனி, உனக்கு உரைக்கவேண்டியது ஒன்றுண்டு. அதனைக் கேள். மலைமேல் இடிவிழுந்தாற்போல, என் கைக்குத்து உன்மார்பில் விழுந்தபின், உயிர்நிலைத்திருக்கப்பெறுவாயெனில், இன்றுபோல, என்றும் நிலைத்திருப்பாய். உனக்குப் பகை என்றும் யாது மில்லையாம்' என்றான். அனுமான், 'என்குத்தால் இறவாதவனாய் உரையாடியதனால், நீ என்னைவென்றாய்' என்று கொண்டாடி 'யான் குத்துதற்கு மார்புகொடுத்த உன்கடனைத் திரும்பப்பெற்றுக்கொள்'! என்று கூறி இராவணன் குத்துவதற்குத் தன்மார்பைக் கொடுத்தான். இராவணன், வாயைமடித்துப் பற்களைக் கடித்துக் கண்களில் நெருப்புப்பொறி புறப்பட்டிட விழித்து, இருபது கைகளையும் இறுக்கிக்குவித்து அனுமான்மார்பிற் குத்தினான். இராவணன் கைகளால் முன் கைலாயமலை சலித்தாற்போல், இப்போது, அனுமான் சலித்தான். அவன் ஈசுவராம்சமானவனாதலால் அவன் சலித்தபோது, சர்வலோகங்களும் சலித்தன; சதுர்வேதங்களும் சலித்தன; (அவனை நிலைக்களமாகக்கொண்டிருந்த) நீதியும் நேர்மையும், தருமமும் சத்தியமும், தயையும் தவமும், பிறபல பிரபல நலங்களும் சலித்தன.

### வானரசேனைத்தலைவரனைவரும் ஒன்றுசேர்ந்து இராவணனை எதிர்த்தல்.

அநுமான் சலித்ததுகண்ட வானரசேனைத்தலைவரனைவரும் ஒன்றுசேர்ந்து ஒவ்வொருவரும் ஒவ்வொருமலையைப் பிடுங்கி, அம்மலைகள் விண்ணிடம் வெற்றிடமில்லதாம்படி சென்று இராவணனைத் தாக்கும்படி எறிந்தார்கள். அவைகள் மேகபடலம் போன்று உலகமுழுதும் இருளடையும்படி சூரியனை மறைத்தன. ஒன்றோடொன்று மோதி யுண்டான தீயும் ஓசையும், மின்னலும் இடியும் ஒத்தன. இராக்கதசேனை நிலைகெட்டு ஓடலுற்றது. இராவணன், அம் மலைகளை அளவிறந்த அம்புகளால் அறுத்தான். அறுத்தவன், 'இக்கணமே குரங்குக்கூட்டமுழுவதையும் கொல்வேன், இப்போதே இருமனிதரையும் வெல்வேன்' என்று கூறிப் பத்து இடக்கைகளாற் பத்து விற்களைப்பற்றி, பத்து வலக்கைகளாற் பாணங்களை எய்வானாய் மண்ணும் விண்ணும் அம்புமயமாக்கினான். வானரங்கள் வரிசைவரிசையாய் மடிபலாயின.

### இரண்டாவது இலக்குமண ராவணர் போர்.

இராவணன் அம்புகளால் இறந்தாரும், ஊறுபட்டுக்கிடந்தாருமல்லாத வானரர், ஓடினார்கள். அதுகண்ட இலக்குமணன், இராவணனை எதிர்த்து, அவன் எய்த அளவற்ற அம்புகளைத் தன் அம்புகளால் அறுத்து, அவன் பிடித்திருந்த பத்துவிற்களையும் அறுத்தொழித்தான். இராவணன் இலக்குமணனது வில்வித்தையை வியந்து, 'உன்னையொப்பாரில்லை; கரன்படையைத் தொலைத்த உன் தமையனும், இந்திரனைவென்ற என்மகனும், யானுமன்றி யார் உனக்கு எதிராவார்' என்று கூறி, 'வில்லினால் இவன் வெல்லப்படான். இவனைக் கொல்லும்நாளும் இன்றுதான்' என்று மனத்துள் நினைத்துப் பல்லினால் உதட்டைக் கடித்துத் தனக்குப் பிரமன் கொடுத்த வேலை எடுத்து இலக்குமணன்மேல் எறிந்தான்.

### இலக்குமணன் மூர்ச்சித்தல்.

இராவணன் எறிந்த வேல், அதனைத் தகர்க்க இலக்குமணன் எய்த அம்புகளெல்லாவற்றையும் எரித்து அவன் மார்பூடு செல்ல அவன் மூர்ச்சித்தான். அதுகண்ட வானரர் நிலைகெட்டு ஓடினர்;

வானவர் வருந்தினர்; அரக்கர் ஆரவாரித்தனர். இராவணன் 'நான் எறிந்த வேலுக்கு இலக்குமணன் அஞ்சிலன், இறந்திலன், சோர்ந்தனன். இந்நிலையில் இவனை எடுத்துக்கொண்டுபோவேன்' என்று தன்மனத்தொடுகூறி, முன் வெள்ளிமலையை எடுத்தது வெட்கத்துக்கிடமானதென் றெண்ணிப் பொன்மலையை யெடுக்கப்புகுந்தாற்போல, இலக்குமணனுடலை இருபதுகைகளாலும்பற்றித் தூக்குவானாக, அசைய இயலாதவனுனேயன்றி அறிவொழியாதவனுயிருந்த இலக்குமணன், தான் திருமாலின் அமிசமென்று சிந்தித்து (அட்டசித்திகளிலொன்றாகிய கரிமாவினால் யோகிகள் உடலை அசைக்கமுடியாதபடி கனமாக்குதல்போல)க் கனமாக்கித் தூக்கமுடியாதவனானன். கரிய பெரிய காத்திரமுடைய இராவணன் கடல்போல (இலக்குமணனை எடுக்கமுயன்று அசையும்) இருபது கரங்கள் அலைகள்போல, (அந்தக் கைகளின்மீது தோன்றும்) இலக்குமணன் கடலின் அலைமீது தோன்றும் சந்திரன்போன்றான். (அன்பரை ஆபத்து அணுகும் அமயமனைத்திலும் அதனை அகற்றி அவரை ஆதரிக்கும்) அனுமான் திடீரென எந்த மூலையிலேயோ இருந்து வந்து இலக்குமணனை வெடுக்கென எடுத்துத் தடுக்கமுடியாத விசையோடு தூரப்போனான். பகைமையுடைய இராவணனுக்கு எடுக்கமுடியாத இலக்குமணன், அன்புடைய அனுமானுக்கு, (இலகிமா என்ற சித்தியால் யோகியுடல் இலேசாதல்போல) எளிதாகத் தூக்கப்படுபவனாக, அவனைத் தூக்கிக்கொண்டு சேமமான இடத்துக்குச்செல்லும் அனுமான், குட்டியைக் கிளைக்குக்கொண்டு போம் தாய்க்குரங்குபோன்றான். இராவணன் எறிந்த வேலால் விளைந்த சோர்வு சிறிதுநேரத்தில் தீர்ந்த இலக்குமணனை அனுமான் இராமனிருந்த இடத்துக்குக் கொண்டுபோய்ச்சேர்த்தான்.

## இராம ராவணர் முதற்போர்.

யானைமேற் செல்லும் சிங்கம்போல, இராவணனைநோக்கி இராமன் செல்ல, அவன், இராமனிருந்த இடத்துக்குத் தன் தேரைச் செலுத்தினான். இராவணனை இரதாரூடனாகவும், இராமனைப் பாதசாரியாகவும் பார்த்த அனுமான், பரிந்து இராமனை

எய்தி, 'அவன் தேரிலிருந்து போர்செய்ய, நீ நிலத்திநின்று பொருதல் நீ எளியனென எடுத்துக்காட்டும்; என்தோண்மேலேறிப் பொருவாயாக' என, இணங்கி, மலைமேலேறும் சிங்கம்போல இராமன் அனுமான்தோள்மேலுற்றான். அந்த நிலையில், வெண்ணிறமுடைய அனுமான், பாற்கடலொத்தான்; அவன்மேலிருந்த கரிய இராமன் (திருப்பாற்கடல்நாதனை) கரிய திருமாலை ஒத்தான்; என்றால், அது பொருந்தாது; ஏனெனில், திருப்பாற்கடல்நாதன் தூங்குவோனாயிருக்க, இராமன் துயிலாதிருக்கின்றானாதலாலென்பது. (வேறு எந்த உவமை இயையுமென்றால்) அனுமான் வேதத்தையொத்தான்: இராமன் வேதசிரசாகிய உபநிடதத்துள்ள ஞானசொரூபியான பரம்பொருளை யொத்தான் (என்ற உவமை இயையுமென்க.) இனி இராமன் எண்ணிய எண்ணியவண்ணம் இடசாரி வலசாரியாகத் திரியும் அனுமான்தோள், மேருமலைச்சிகரம்போலுமென்றால் அது திரியவல்ல சரப்பொருளுக்குத் திரியலாகாத அசரப்பொருளை உவமிக்கும் குறையுடையதாதலால், பொருந்தாதாமென்க.

இராமன் அனுமான்தோள்மேலேறி இராவணனை எதிர்க்கப் புறப்பட்டபோது, அருந்தவமுனிவர்கள் ஆசிவழங்கினர், தருமதேவதை ஆநந்தத்தாண்டவமாடியது, பரமன் பிரமன் முதலிய பண்ணவர்கள் போரைப் பார்க்க அந்தரத்தில் வந்தமர்ந்தார்கள். போர்தொடங்குங்குறியாக, இராமன் கோதண்டத்தை நாணெறிந்தான். அந்த நாணொலி, ஊழிமுடிவில் உலகையழிக்குமுன் உருத்திரமூர்த்தி உங்காரஞ் செய்யும் ஓசையை ஒத்தது. இராவணன் ஏழம்புகளை எய்தான். இராமன் ஏழம்புகளெய்து அந்த ஏழம்புகளையும் எவ்வேழுதுண்டங்களாகச்செய்து வேறு ஐந்தம்புகளை எய்தான். அவைகளை இராவணன் ஐந்தம்புகளால் மாற்றிப் பின்னும் பத்தம்புகள் விடுக்க, அவற்றை இராமன் அத்தொகைகொண்ட அம்புகளால் அறுத்தான். பிறகு, வேறுபல அம்புகளால் இராவணன் அம்புகளும் ஏனைய இராக்கதவீரர் அம்புகளும்

வானரர்மீதுபடாதபடி காத்து அரக்கர்தலைகளை வீழ்த்தி மலைக ளாகக் குவித்தான். தன்மேல் நின்ற இராமன் அம்புக்கும் மனத் துக்கும் முன்னாக விரைந்துசெல்லும் அனுமான், மண்ணிடத் துள்ளானென்றுசொல்லுமுன் விண்ணிடத்தானுவான்; இமைக்கு முன் இராவணன்முகங்களெவ்வொன்றுக்கும் எதிராவான்; அள வற்ற அரக்கர் ஒவ்வொருவர்பார்வையூடும் உலாவுவானானான்.

அந்தப் போர்க்களத்திலே கவந்தங்கள்* ஆடின, (பாடுதற்கு வாயில்லாத அந்தக் கவந்தங்களோடு வாயுடைய) பேய்கள் ஆட லோடு பாடலும் புரிந்தன. இறந்த யானைகள், குதிரைகள், கா லாட்களின் பிணங்களை வாரிக்கொண்டு இரத்த ஆறுகள் ஓடின. இராக்கதசேனைத்தலைவர்கள், தங்களுடைய தேர்களையும் யானை களையும் குதிரைகளையும் காலாள்களையும் இழந்து இறுதியாகத் தங்கள் தலைகளையும் இழந்தார்கள். அவர்கள் வாய்கள் ஆர்த்த லடங்கின; அவர்கள் கண்கள் சினத்தீ கொழுந்துவிட்டெரியப் பார்த்தலடங்கின; கைகள் பலவகைப் படைக்கலங்களைத் தூர்த்த லடங்கின; அவர்கள் கால்கள், விரைந்துநடந்து மேலெழச்செய் யும்புழுதிப்படலங்களால் பூமியைப் போர்த்தலடங்கின. அரக்கிமார் யானைத்தலை குதிரைத்தலைகளையுடைய தங்கள் கணவன்மார் தலை யற்ற உடல்களை அறுபட்டுக்கிடந்த அம்மிருகத்தலைகளோடு பொருத்தி இறுகத்தழுவி இன்னுயிர்துறந்தார்கள்.

இராவணனொருவனும் அவன் இருந்த தேரொன்றுமே மிஞ்ச அவனுடைய சேனைகளெல்லாவற்றையும் இராமபாணங்கள் தொலைத்தன. தன் சதுரங்கசேனை ஒருசிறிதுமின்றி யொழிந்த தை உணர்ந்த இராவணன், கொடுங்கோபங்கொண்டு, மரகத மலைகளை நிறத்தாலும், பெருமையாலும் நேர்ந்து திரண்ட இராமன் தோள்களிரண்டினும் அழுந்தும்படி இரண்டம்புகளையெய்தான். இராமன் புன்னகைபுரிந்து அந்த இரண்டம்புகளையெய்த இரா வணன்வில்லை ஒரு கணையால் இருதுண்டங்களாக்கினான்: அவன்

---

* கவந்தம் - தலையற்ற உடம்பு.

மாற்றுவில்லை வளைத்து நாணேற்றுமுன், தன் அம்புகளால் அதனை அறுத்துத் தேர்க்குதிரைகளின் சிரங்களை அரிந்தான்: வேறுசில அம்பெய்து (அம்பு எய்தற்கு இன்றியமையாத வில்லொழிந்த அவன் எறியத்தொடங்கிய எல்லாப் படைக்கலங்களையும் இடையிலே அற்றுவிழும்படிசெய்து, அவன் வெண்கொற்றக்குடையும் கவசமும் தேரும் அழியும்படி செய்தான்: மாற்றுத்தேர்கள் வந்தன வந்தன எல்லாவற்றையும் அம்புகளா லழித்தான்: பின்னும் சில அம்புகளெய்து மகுடங்கள் கடலிற்போய்விழும்படிசெய்தான். இராமபாணங்களால் தாக்கப்பட்டு இராவணன் சென்னியினின்று பறியுண்டு கடலில்விழுந்த செம்பொற்கிரீடங்கள், முன் ஒரு காலத்தில் வாயுதேவனால் மோதப்பட்டு மேருவினுச்சியினின்று விண்டு கடலில்விழுந்த செம்பொற்சிகரங்கள்போன்றன. இராவணனது சோதிமயமான இரத்தினகிரீடம் ஒவ்வொன்றும் நீண்ட ராம பாணத்தாற் கதுவப்பட்டுக் கடலில் விழுந்த காட்சி, (அத்தமன காலத்து நிகழும் கிரகணத்தில் இராகுவாகிய நீண்ட) பாம்பினாற் கவரப்பட்ட சூரியன் கடலில்விழும் தோற்றத்தைப்போன்றது. இதுவரையும் போர்புரியநேர்ந்தபோதெல்லாம் வெற்றியன்றித் தோல்வியை யறியாத கரிய இராவணன், கிரீடமிழந்ததனால் சூரியனில்லாத பகலையும் சந்திரனில்லாத இரவையும் ஒத்தான். இராமனம்பால் தன் கிரீடங்களெல்லாவற்றையும் இழந்த இராவணன், தன் வாக்கினால் யாரையும் வாழ்விக்கவும் தாழ்விக்கவும் வல்ல வரகவி ஒருவனுடைய வசைப்பாட்டால் தான் அடைந்திருந்த அரிய புகழனைத்தையும் இழந்த ஒருவனை ஒத்தான். போர்புரிதற்குரிய சாதனங்களெல்லாம் இழந்து செயலற்றதனால், செருக்குத்தீர்ந்து, நிமிர்ந்த பார்வை நீங்கிக் கீழ்நோக்கியவனாய், ஒளியிழந்த முகத்தினனாய்க் கவிழ்ந்த தலையினனாய்ப் பல விழுதுடைய ஆலமரம்போலத் தாழ்ந்து தொங்கிய கரத்தினனாய், இயல்பாகக் கறுத்தநிறம் அதிகமாகக் கரிந்திட, மாதர்போல, நாணங்கொண்டு; கால்விரல்களால்

நிலத்தைக் கீறிக்கொண்டுநின்றான்.* அந்நிலையில், அவன் அறநெறி தவறியவர் முடிவு இதுவாமென்று உலகுக்கெல்லாம் உணர்த்து வான் ஒத்தான். இராமன் அவனுடைய இரங்கத்தக்க நிலையைக் கண்டு, வெறுங்கையனாய் நிற்கின்றானென்பதை யுட்கொண்டு, கொல்லுதல் குறியாதவனாய், அவனைநோக்கி, 'உனது தீமை (செய்யுந்திறமை) இன்று தீர்ந்ததுபோலும், நான்கூறுவதைக் கேள். தருமத்தினாலல்லாமல், அதருமத்தினால் செயமடைதல், தேவ தேவர்களுக்கும் அருமையானதென்பதை உன் மனதில் உறுதியாகக்கொள்வாயாக. இப்போது, என் கையால் இறந்திருப்பாய், நீ எல்லாமிழந்து தனியனாய் நிற்பதுகண்டு இரங்கி உன்னைக் கொல்வதை உன்னவும் செய்கிலேன். உன் உறவினரோடுறும்படி உன் ஊருக்கு ஓடிப்போ. நீ சிறையில்வைத்தவளை விட்டு, நீ பறித்த பதவியினைத் தேவருக்குத் திரும்பக்கொடுத்து, அவர்களை

---

* இது, மாதர்நாணநிலையைக்குறித்த அருணைக்கலம்பகப்பாட்டொன்றை நினைவுகூரச்செய்கின்றது. அப்பாட்டு:—

மேலாடை தோற்றணி சங்காழி கைவிட்டு மென்சிலம்பின்
காலால் வருந்தி நிலங்கீறுங் கோலத்தைக் கண்டிருந்தும்
ஆலால முண்டவ ரண்ணா மலையர்த மன்பர்க்கன்றி
மாலான வர்க்கிரங் காரிங்ங னேயொரு வன்கண்ணரே. என்பது.

இதனுள், மாலானவர் என்பது திருமால், (காம)மயக்கமடைந்த மகளிர் என இருபொருள்படும். திருமால்விஷயத்தில், (மேலாடை தோற்று—) பீதாம்பரத்தை யிழந்து, (சங்காழி கைவிட்டு-) சங்கசக்கிரங்களையும் நீக்கி, (சிலம்பின் காலால் வருந்தி நிலங்கீறும் கோலத்தை-)அருணாசலத்தினடியைக்காணுமேதுவினால் பூமியைக் கிண்டும் பன்றிவடிவத்தை எனவும், மயக்கமடைந்தமகளிர் விஷயத்தில் (ஆடை தோற்று—) உடையையிழந்து, (சங்காழி கைவிட்டு—) வளையும் மோதிரமும் கழலவிட்டு, (சிலம்பின்காலால் வருந்தி நிலங்கீறும் கோலத்தை—) சிலம்பையணிந்திருக்கிற கால்விரலாற் பூமியைக் கிண்டு கின்ற கோலத்தை எனவும் இருபொருள் அமைந்துநின்றவாறு காண்க.

முன் வாழ்ந்தமுறைப்படி வாழவிடுத்து, என்னுல் இராக்கதர்க்கு இறைவனுக்கப்பெற்றிருக்கின்ற உன் தம்பி ஏவிய ஏவல்களைச் செய்யும் சேவகனுக வாழ்வாயானுல், உன் சிரங்களை என் சரங்க ளால் அரிந்து தள்ளாதிருப்பேன். நான் கூறியவாறு செய்வாயல்லை யானுல், உனக்குள்ள ஆட்பலம் ஆயுதபலமெல்லாங்கொண்டுவந்து எதிர்த்துப் பொருது இறப்பாயாக. இனிப் பிழைப்புண்டென் றெண்ணி வீண் ஆசை வையாதே' என்ருன்.

57 ஆள யாவுனக் கமைந்தன மாருத மறைந்த
பூளை யாயின[1] கண்டனை யின்றுபோய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கின னுகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசல[2] நாடுடை வள்ளல்.

கொண்டுகூட்டு: நாகிளங்கமுகின்(மீது) வாளை தாவுறு கோசல நாடு உடை(ய) வள்ளல், 'ஆள யா(வை) உனக்கு அமைந்தன? (அவை) மாருதம் அறைந்த பூளை ஆயின கண்டனை. இன்றுபோய்ப் போர்க்கு நாளை வா' என நல்கினன்.

பொருள்: மிக இளமையான கமுகமரங்களின்மீது வாளை மீன்கள் துள்ளிப்பாயும் (நீர்வளம் நிரம்பிய) கோசலநாட்டை யுடைய உதாரசீலனுன இராமன், 'ஆளுதற்கு யாவை உனக்கு அமைந்தன(வோ, அவை) காற்றினுல் மோதப்பட்ட பூளைப்பஞ்சு போல(ப் பறக்கடிக்கப்பட்டன) ஆயின. இன்று (ஊர்க்குப்)போய் (தேர்ப்படை முதலிய நாற்படையும், வில் அம்பு முதலிய எல்லா ஆயுதங்களுங்கொண்டு) போர்க்கு நாளைவா' என்று கூறியருளினுன்.

பூளை, ஆகுபெயராய் அதன் பஞ்சை உணர்த்திநின்றது. பூளைப்பஞ்சு, பருத்திப்பஞ்சு இலவம்பஞ்சு போலப் பஞ்சுவகைகளுள் ஒன்று. பெரும் பான்மையாகக் 'கொடுத்தல்' என்னும் பொருளில்வரும் நல்குதல் இங்கே, 'அருள்செய்தல்' என்னும் பொருளில்வந்தது கவனிக்கத்தக்கது. 'நாகு' 'இளமை' என்ற இளமைப்பொருளுடைய இரண்டுசொற்கள் சேர்ந்து

மிகுந்தஇளமை குறித்தன. இராமன், எதிரியிடத்தும் எளிமைகண்டால், இரங்கியருளும் பேரருளாளனென்பதைப் புலப்படுத்த 'வள்ளல்' என்ருரென்னலாம்.

பின்வருவது, வை. மு. கோ. உரையிலுள்ளது:–' "காற்றிடைப் பூளை கரந்தன வரந்தை யுறக்கட லரக்கர்தஞ் சேனை, கூற்றிடைச் செல்லக் கொடுங்கணை துரந்த கோலவில் லிராமன்"* என்ற பெரியார்பாசுரம் முன்னிரண்டடிகளிற் காணத்தக்கது. "பேராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கா–லூராண்மை மற்றத னெஃகு" என்ற திருக்குறளும், "ஊராண்மை—உபகாரியாந்தன்மை: அஃதாவது—இலங்கையர்வேந்தன் போரிடைத் தன் ருனைமுழுதும் படத் தமியனாயகப்பட்டானது தனிமைநோக்கி, அயோத்தியரிறை மேற்செல்லாது 'இன்றுபோய் நாளை நின் ருனையோடு வா' என விட்டாற்போல்வது" எனப் பரிமேலழகர் விசேடவுரை கூறியதும் இங்குக் காணத்தக்கன: இது–புறப்பொருளில் தழிஞ்சி என்னும் துறையாம்: தழிஞ்சி இன்னதென்பதனை "அழிகுநர் புறக்கொடை யயில்வா ளோச்சாக், கழிதறுகண்மை காதலித்துரைத்தன்று" என்ற புறப்பொருள்வெண்பாமாலையின் கொளுவாலும், அறிக. தழிஞ்சி–தழுவல்: தழிச்சுதல் தழிஞ்சியாயிற்றென்பர், நச்சினார்க்கினியர்'

இப்பாட்டு, கம்பராமாயணத்திலிருந்து அடிக்கடி எடுத்துக் கூறப்பட்ட பாட்டுக்களில் ஒன்று; முதன்மையானதென்று கூடக் கூறலாம். நான்பார்த்த அச்சிட்ட புத்தகங்களெல்லாவற்றிலும் 'ஆளையா' என்ற பாடமே உள்ளது. அதற்கு '(அரக்கரை) ஆள்கின்ற ஐயா' என்றும், 'அரக்கரை ஆளும் அரசனே' என்றும் பொருள்கூறப்பட்டிருக்கிறது. இப்பொருள், இப்பாட்டுக்கு முந்திய, இதனோடு தொடர்புடைய, இராமன் இராவணனுக்கு நல்லறிவுறுத்தக்கூறும் வாசகங்களடங்கிய பாடற்றொகுதியில்,

---

* பெரியதிருமொழி. 4–10–6.

'அறத்தி னாலன்றி அமரர்க்கும் அருஞ்சமங் கடத்தல்
மறத்தி னாலரி தென்பது மனத்திடை வலித்தி'
பறத்தி நின்னொடும் பதிபுகக் கிளையொடும் பாவி
இறத்தி யான்அது நினைக்கிலென் தனிமைகண் டிரங்கி.*

என்றதனோடும், 'உடைப்பெரும்' என்ற 253-ஆம் பாட்டில் 'சிறு தொழிற்கிழோய்' என்றும், 'சிறையில்வைத்த' என்ற 254-ம் பாட்டில் (விபீடணனுக்கு 'ஏவல்செய்திருத்தி' என்றும் இகழ்ச்சியாக உரைத்திருப்பதனோடும் பொருந்தவில்லை. அவைகளுக்கு மாறாக இருக்கிறதென்றுங் கூறலாம்.

'ஆளயா' என்ற பாடம் சில வித்வான்கள்கூறக் கேட்டது. திருநெல்வேலிக்கவிராயர்வீட்டு ஏட்டுப்பிரதியில் உள்ளது.

பாடபேதம்:—[1] ஆனவை. [2] கோசலை.

முதற்போர்புரிபடலம் முற்றிற்று.

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

---

* சமம் - போர். மறம் - அதர்மம். வலித்தி - உறுதியாகக்கொள்வாய். பறத்தி - பறப்பாய் - விரைந்துபோவாயாக. இறத்தி (யான் கொல்ல) நீ இற(க்கிரு)ப்பாய்.

# ஒரு வேண்டுகோள்.

வை. சுந்தரேசவாண்டையார், ஆசிரியர், திருவையாறு.

'தார்வேந்தன் சோழனே' என்று ஆன்றோரால் புகழ்ந்துரைக்கப்பெற்ற சோழமன்னர்களால் நம் சோழநாட்டில் எடுப்பிக்கப் பெற்ற திருக்கோயில்கள் மிகப்பலவாகும். அவைகளில் சில வேற்றுவேந்தர்களது படையெழுச்சிகளினாலும், நன்கு புரப்பார் இன்மையானும் அழிந்தொழிந்தன. எஞ்சியுள்ள கோயில்கள் இன்றும் நிலைபெறுடையனவாய்ச் சோழமன்னர்களது பண்டைச் சிற்பவன்மையை இனிது விளக்குவனவாயுள்ளன. அவ்வன்மையைப்பற்றி இதுகாறும் எவரும் நூல் எழுதாதது ஒருபெருங் குறையாகும்.

பல்லவர்கள், சளுக்கியர்கள் இவர்களின் சிற்பவன்மைகளை யுணர்த்தும் நூல்களைப்போல் ஆராய்ச்சியாளர்கள் இத்துறையில் இறங்கி நூல்கள் எழுதுவார்களானால் அவைகள் சோழமன்னர்களது புகழுக்கும் பெருமைக்கும் நிலைக்களமாய் இருக்குமென்பது திண்ணம்.

ஆகையால் ஆராய்ச்சியாளர்களை இத்துறையில் இறங்கி விரைந்து நூல் எழுதவேண்டுகின்றேன். இவ்வாராய்ச்சிக்குப் பயன்படுமாறு, சோழமன்னர்களால் எடுப்பிக்கப்பெற்ற திருக்கோயில்கள் நிலைத்துள்ள ஊர்களையும் சில குறிப்புக்களையும் ஈண்டுத் தருகின்றேன்.

| சோழமன்னர் பெயர். | அவர் (தஞ்சை ஜில்லாவில்) எடுப்பித்த கோயில் உள்ள ஊர். |
|---|---|
| 1 முதலாம் ஆதித்தன் | திருப்புறம்பயம் |
| 2 முதற்பராந்தகன் | திருநல்லம் (கோனேரிராசபுரம்) |
| 3 உத்தமசோழன் | திருவிசயமங்கை (கோவந்தபுத்தூர்) |
| 4 முதலாம் இராசராசன் | தஞ்சாவூர் (இராசராசேச்சரம்) |
| 5 கங்கைகொண்டசோழன் | கங்கைகொண்டசோழபுரம் |

| | | |
|---|---|---|
| 6 | முதற்குலோத்துங்கன் | திருவைகாவூர், சூரியனார்கோயில், இராசமன்னார்குடி இராசகோபால ஸ்வாமிகோயில். |
| 7 | விக்கிரமசோழன் | குற்றாலம் (திருத்துருத்தி) |
| 8 | இரண்டாங்குலோத்துங்கன் | சிதம்பரம் |
| 9 | இரண்டாம் இராசராசன் | தாராசுரம் |
| 10 | மூன்றாங்குலோத்துங்கன் | திரிபுவனம், பல்லவராயன்பேட்டை |

## சில குறிப்புக்கள்.

சோழர்களால் கட்டப்பெற்ற கோயில்களிலுள்ள வாயில்காவலாளர்களுக்கு (துவாரபாலகர்களுக்கு) நான்குகைகள் இருக்கும். பல்லவர்களால் கட்டப்பெற்ற கோயில்களிலுள்ள வாயில்காவலாளர்களுக்கு இரண்டே கைகள்தான் இருக்கும். முதலாம் இராசராசசோழமன்னன்காலத்தில் இம்முறை மாறிவந்துளது.

சோழர்களால் கட்டப்பெற்ற கோயில்களில் விமானத்தின் மேற்குப்பக்கத்தின் நடுவில் (வெளிப்பக்கத்தில்) இலிங்கோற்பவமூர்த்தியின் படிமம் அமைக்கப்பெற்றிருக்கும். (இம்முறை முதலாம் இராசராசன்காலமுதல் மாறியும் வந்துளது). பல்லவர்களால் கட்டப்பெற்ற கோயில்களில் விமானத்தின் மேற்குப்பக்கத்தின் நடுவில் (வெளிப்பக்கத்தில்) அர்த்தநாரீச்சுரமூர்த்தியின்படிமம் அமைக்கப்பெற்றிருக்கும். சில இடங்களில் மேற்குறித்த அப்பாகத்தில் விட்டுணுவினுடைய படிமமும் அமைக்கப்பெற்றிருக்கும்.

சோழமன்னர்களில் முதலாம் இராசராசன், கங்கைகொண்ட சோழன், மூன்றாங்குலோத்துங்கன் என்போர் விமானத்தையே பெரியதாகவும், உயரமாகவும் கட்டவேண்டுமென்று விருப்புடையவர்களாயிருந்தார்களென்று அவர்களால் எடுப்பிக்கப்பெற்ற கோயில்களின் விமானங்கள் உணர்த்துகின்றன.

# தண்டியலங்காரம்.

[இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரை. திரு. சோமசுந்தர தேசிகர்]

அலங்காரம் என்ற வடமொழிச்சொல் தமிழ்மொழியிலே அழகு என்ற பொருளில் வழங்கிவருகிறது. செய்யுளிலே காணப் படும் அழகினை அணியென்பர். அதனையே அலங்காரம் என்றுங் கூறுவர் பெரியார். இலக்கணநூலார் அணி அலங்காரம் என்ற இருசொற்களையும் ஒருபொருளிலேயே வழங்குவர். 'தண்டியலங் காரம்' என்று சொல்லும்போது தண்டியார்செய்த அணிநூல் எனப் பொருள்படும். இவ்வணிநூல்செய்த தண்டியார் யாவர்? இவர் கூறியன யாவை? இவருடைய காலம் எது? என ஆராய் வதே இக்கட்டுரையின் நோக்கம்.

தண்டி என்ற பெயருடையார் இருவரென எல்லோரும் அறி வர். அவர்களுள்ளே ஒருவர் வடமொழியில் காவ்யாதர்சம் என்ற அலங்காரநூல்செய்த ஆசார்யதண்டியாவர். அவருடைய காலம் சற்று முன்பின் 6,7-ஆம் நூற்றாண்டென்பர் வடமொழிவல்லார். அவரைக்குறித்த ஆராய்ச்சியன்று, நாம் இப்போது செய்வது.

மற்றொருவர் தண்டியலங்காரம் என வழங்கும் அணியிலக் கணத்தைத் தமிழிற்செய்த தண்டியார் ஆவர். இவருடைய பிறப்பு, வளர்ப்பு, ஊர் முதலாயினவற்றுள் எதனையும் இதுவரையில் எவரும் தெளிவுபடக் கூறினாரல்லர். ஆயினும் அந்நூலிலே,

வடதிசை யிருந்து தென்மலைக் கேகி
மதிதவழ் குடுமிப் பொதிய மால்வரை
இருந்தவன் றன்பா லருந்தமி ழுணர்ந்த
பன்னிரு புலவரின் முன்னவன் பகர்ந்த
தொல்காப் பியநெறி பல்காப் பியத்தும்
அணிபெறு மிலக்கண மரிதினிற் றெரிந்து
வடநூல் வழிமுறை மரபினின் வழாது
ஈரிரண் டெல்லையி னிகவா மும்மைப்
பாரத விலக்கணம் பண்புறத் தழீஇத்

திருந்திய மணிமுடிச் செம்பிய னவையத்
தரும்பொருள் விளங்க யாப்பின் வகுத்தனன்
ஆடக மன்றத்து நாடக நவிற்றும்
வடநூ லுணர்ந்த தமிழ்நூற் புலவன்
பூவிரி தண்பொழிற் காவிரிநாட்டு
வம்பவிழ் தெரிய லம்பிகாபதி
மேவருந் தவத்தினிற் பயந்த
தாவருஞ் சீர்த்தித் தண்டியென் பவனே

என்பது சிறப்புப்பாயிரமாகக் காணப்படுகின்றது.

இச்சிறப்புப்பாயிரம் அம்பிகாபதியென்பாரின் மகனுரான தண்டியென்பார் இந்த நூலைச்செய்தவர் எனக் கூறும். இவர், வடமொழி தென்மொழிகளில் வல்லவரென்பதும், காவிரிநாட்டவர் என்பதும், ஆடகமன்றமான சிதம்பரத்தின்கண்ணே நாடகவாசிரியராகவோ நிருத்தத்தொழிலாசிரியராகவோ இருந்தவரென்பதும், இந்நூல் ஒருசோழவரசனுடைய அவையிலே அரங்கேற்றமடைந்ததென்பதும் மேற்கூறிய பாயிரச்செய்யுளான் அறியப்படுவன. மேற்கண்டவற்றுள் ஒருசெய்தியான 'ஆடகமன்றத்து நாடக நவிற்றும்......புலவன்' என்பதற்கேற்ப, இவர் அத்திருப்பதியிற் கோயில்கொண்டுள்ள கூத்தப்பெருமான்மீது ஆராவன்புடையவரென்பது அந்நூலிலே காணப்படும் பின்வருஞ் செய்யுள்களால் விளங்கும்.

1 'உள்ளங்குளிர வுரோமஞ் சிலிர்த்துரையும்
தள்ளவிழி நீரரும்பத் தன்மறந்தாள்—புள்ளலைக்குந்
தேந்தா மரைவயல்சூழ் தில்லைத் திருநடஞ்செய்
பூந்தா மரைதொழுத பொன்.'

2 'மறுப்பயின்ற வாண்மதியு மம்மதிக்குத் தோற்கு
நிறத்தலரு நேரொக்கு மேனும்—சிறப்புடைத்துத்
தில்லைப் பெருமா னருள்போற் றிருமேனி
முல்லைப்பூங் கோதை முகம்.'

3 'வாய்த்த பொருள்விளைத்த தொன்றில்லை மாதவமே
யார்த்த வறிவில்லை யம்பலத்துக்—கூத்துடையான்
சீலஞ் சிறிதேயுஞ் சிந்தியேன் சென்றொழிந்தேன்
காலம் வறிதே கழித்து.'

4 'பொங்கிச் செறிந்து புடைதிரண்டு மீதிரண்டு
செங்கலசக் கொங்கை திகழுமால்—எங்கோன்றன்
தில்லையே யன்னா ரிவரல்குற் றேரின்மேல்
இல்லையோ வுண்டோ விடை'

5 'காலையு மாலையுங் கைகூப்பிக் காறொழுதான்
மேலை வினையெல்லாங் கீழவாம்—கோலக்
கருமான்றோல் வெண்ணீற்றுச் செம்மேனிப் பைந்தார்ப்
பெருமானைச் சிற்றம் பலத்து'

பின்னும் இவ்வாறு கண்ட செய்யுட்கள் பலவாம்.

இவர் பிறந்த ஊரையும் ஒருவாறு ஊகித்தல்கூடும். இவர் இயற்றிய அலங்கார நூலிலே இருபொருள்வேற்றுமைச்சமத்துக்கு உதாரணமாக,

'சென்று செவியளக்குஞ் செம்மையவாய்ச் சிந்தையுள்ளே
நின்றளவி லின்ப நிறைப்பவற்றுள்—ஒன்று
மலரிவருங் கூந்தலார் மாதர்நோக் கொன்று
மலரிவருங் கூத்தன்றன் வாக்கு'.

என்னும் செய்யுள் காட்டப்பட்டுள்ளது.

இச்செய்யுளிற் கண்ட கூத்தன் என்பதனைக் கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தனெனக்கொண்டு மயங்கினாரும் உளர்[1]. அது பொருந்தாமை முன்னர்க் காட்டுவேன்.

இந்நூலாசிரியரான தண்டியார் நாடகநவிற்றுந்தொழிலுடையராதலால், 'தன்னைக் கூத்தன்' என்றார். மேலேகாட்டிய செய்யுளான் இவரது ஊர் மலரி என ஒருவாறு துணிதல் தவறாகாது.

இவர் சமயத்திற் சைவர் என்பது சொல்லாமலே அமையும். அஃதன்றியும் மேற்காட்டிய 'வாய்த்த', 'காலையும்' என்ற முதனினைப்புக்களையுடையசெய்யுட்கள், மேலும் இதனை வலியுறுத்தும். பிறிதோரிடத்தும் இவர்,

---

1 மயங்கியவர்களுள் யானும் ஒருவனே. ஆயினும் பிற்பட்ட ஆராய்ச்சியால் அக்கொள்கை தவறு என்பது தெளிவுபடுகிறது.

'நிலனும் விசும்பா நிமிர்கானீர் தீயாம்
அலர்கதிராம் வான்மதியா மன்றி—மலர்கொன்றை
ஒண்ணறுந் தாரா னொருவனிய மானனுமாம்
எண்ணிறந்த எப்பொருளு மாம்'

என்பர். இது,

'இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி இயமான னாயெறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி ஆகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணு மாணும் பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி
நெருநலையாய் இன்றாகி நாளை யாகி நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே'

என்ற அப்பர் திருவாக்கை நினைவூட்டும். 'நீதியாய் நிலனாகி நெருப்பாய் நிறைகாலாய் இவையிற்றின் நியம மாகி' என்பதனையும் நோக்குக.

இவர், வடமொழி நன்கறிந்தவரென்பது ஆசார்ய தண்டியினது காவ்யாதர்சத்தைப் பெரிதும் பின்பற்றியுள்ளாரென்பதனால் நன்குபுலனாகும். இவர் தமது அலங்காரநூலைக் காவ்யாதர்சத்திற் கண்டவாறே செய்திருப்பதோடு உதாரணச் செய்யுள்களுட் பலவற்றையும் காவ்யாதர்ச உதாரணக்கருத்தினையே கொண் டமைத்துள்ளனர்.

இந்தத் தண்டியலங்காரநூல் செம்பியன் அவைக்களத்திலே அரங்கேற்றப்பட்டதாகப் பாயிரம் கூறும். அவ்வேந்தன் யாவனென ஆராயவேண்டியதே நமது முக்கிய கடமை. தண்டியாசிரியர் பொதுச்சொல்லான செம்பியன் எனக் கூறாது அவன் இன்னானெனக் கூறிப்போந்திருப்பின் பல ஐயங்களுக்கு இடந்தந்திராது. முன்னோர் பலரும் பின்னோரை இவ்வாறான சிக்கலில் ஆழ்த்திச் சென்றனர். ஆயினும், இவ்வாசிரியர் காலத்தைக்குறித்துக் காணப்படுஞ்செய்திகளிற் சிலவற்றை ஈண்டுக் கூறுவேன்.

முதன்முதலாகத் தண்டியாரது காலத்தைக் குறித்தவர் அப்பொழுது செந்தமிழ்ப் பத்திராசிரியராகவிருந்த மகாவித்வான் ரா. இராகவையங்காரவர்களாவர். அவர்கள், செந்தமிழ்த் தொகுதி ௩ பக்கம் 351-352-ல் எழுதியதாவது:

"இனி, தண்டியலங்கார நூலார் தம் இனிய நூலின்கண்ணே பலவிடத்தும், 'வண்புயலே', 'மூவாத்தமிழ்', 'குழைபொருது'[2] என்பனபோலப் பெரும்பான்மையாக அநபாயன், சென்னி என்னும் பெயர்களால் ஒரு சோழனையே எடுத்துப் புகழ்ந்துரைத்துள்ளார். அந்நூலுட் புகழப்பட்ட சென்னி அனபாயன் என்னும் சோழன் யாவனென ஆராயுங்கால் அவ்வலங்கார நூற்கண்ணே "சென்றுசெவி...........……வாக்கு" என ஒட்டக்கூத்தர்கவியைப் புகழ்ந்துரைக்குமாற்றால், அவ்வணிநூல் கூத்தர்காலத்தே இயற்றப்பட்டதாகத் துணியப்படும். கூத்தர்காலத்தே சென்னி அனபாயன் என்னும் பெயர்களால் விளங்கியவன் அகளங்கன்மகனாகிய குலோத்துங்கன் II என்பது முன்னே தெளிவிக்கப்பட்டதாம். இவற்றால் தண்டியலங்கார நூலாற் புகழப்பட்ட சோழனும் இவனாதல் காண்க. இனித் தண்டியலங்கார நூற்கண்ணே, 'காடத்தான்..............வளம்' என்பன போலவும் சிலவிடத்து வருதலால் அவ்வணிநூல் கலிங்கம்வென்ற அபயன்காலத்ததாகக் கூறலாகாதோவெனில் கலிங்கம்வென்ற அபயன் சயங்கொண்டார் பாடிய பரணிபுனைந்தவன். அவன்காலம் ஒட்டக்கூத்தருக்குமுற்பட்டதாதலாலும் அவ்வபயனுக்கு அனபாயன் என ஒரு பெயருண்டாயின் அதனை அவனுக்குச்சூட்டிய கலிங்கத்துப்பரணிநூற்கண் சயங்கொண்டார் என்னும் புலவர்பெருமான் கூறாதிராராதலாலும் ஆகாதென்க. மற்றிக் கலிங்கம் வென்றதனை ஈண்டெடுத்து ஓதியதெல்லாம் பிதாமகன்சிறப்பைப் பேரனுக்கேற்றிப் புகழ்ந்ததாமென்க." என்பதாம்

"தண்டியலங்காரம் ஒன்றே தமிழ்அணி அல்லது அலங்காரத்தைக் குறித்துக்கூறும் நூல். அது தண்டியின் காவ்யாதர்சத்தைப் பின்பற்றுவதால் அப்பெயர் அதற்கிட்டது தகுதிவாய்ந்ததே; அது காவ்யாதர்சத்தின் மொழிபெயர்ப்பென்றே கூறலாம். ஆசிரியர் பெயரும் அவரது வாழ்க்கைநிலை காலம் முதலியனவும் முற்றும் மறைந்துபோயின. காலங்காட்டாத ஒரு செய்யுள், நூலாசிரியர் அம்பிகாபதியின்மகனை தண்டியென்றும், அவர் வடமொழி தென்மொழிகளில் வல்லவரென்றும், வடமொழியலங்காரநூல்களைப் பின்பற்றி இக்நூல் செய்தனரென்றும் கூறும். கல்வியிற் பெரியராய கம்பருக்கு அம்பிகாபதியென ஒரு

[2] இச்செய்யுள்கள் முன்னர்க் காட்டப்படுகின்றன.

புதல்வர் இருந்தனரென்றும், அதுகாரணமாக இந்நூலாசிரியர் கம்பருடையபேரனென்றுங் கூறுவர். சிலப்பதிகாரத்துக்குப்பேருரைகண்ட அடியார்க்குநல்லாரே முதன்முதலில் இந்நூலையெடுத்தாண்டவர். இது அணியியல், அணியதிகாரம் எனவும் பெயர்பெறும். இந்நூல் சூத்திரயாப்பிலமைந்து காவ்யாதர்சத்தைப் போன்று பொருளணி சொல்லணிகளைக் கூறுகின்றது. 18-ஆம் நூற்றூண்டில் வாழ்ந்த பிரயோகவிவேகநூலார் தண்டியாசிரியர் சூத்திரமுஞ்செய்து உரையும் உதாரணமு மெழுதினரென்பர். இது உண்மையாக விருக்கலாம்; உரையிற்கண்ட பல உதாரணங்கள் ஒரு அனபாயசோழனைக் குறிக்கின்றன என்பது மிக்க வியப்பினையுடையது" என்பது சோழர்சரித்திரத்திற்[3] கண்டது.

---

[3] The DANDIYALANKARAM is the only work devoted entirely to the discussion of ALAMKARA, or ANI as it is called in Tamil. The name of the work is justified by its closely following the model of Dandi's KAVYADARSA, being in fact a more or less close rendering of it in Tamil. The name of the author and the details of his life and age have disappeared altogether. There is a verse of unknown age which states that the author was the son of Ambikapathi and was himself called Dandi, that he attained eminence in Sanskrit and Tamil learning, expounding ALANKARA on the lines laid down by sanskrit rhetoricians. The great poet Kamban is reputed to have had a son Ambikapathi by name, and it is sometimes held that our author was the grandson of Kamban. One of the earliest reference to the DANDIYALANKARAM is that by Adiyarkunallar, in his celebrated commentary on the SILAPPADIKARAM. The work was also apparently called ANIYIYAL, ANIYILAKKANAM and ANIYADIGARAM. It is composed in SUTRA style and, like the KAVYADARSA, it treats of the nature of the poetry and kavya, and of figures of speech under two generic heads arthalan kara (PORULANI) and sabdalankara (சொல்லணி). The author of PRAYOGAVIVEKAM writing sometime in the eighteenth century, says that the author of the DANDIYALANKARAM annotated the sutras and illustrated them himself. This seems probable, and it is interesting to note that some of the illustrative stanzas are in praise of Anapaya Chola. (The Cholas. ii, 546.)

இவ்வளவே முன்னோர் தண்டியைக்குறித்துக் கூறியவை. இவற்றுள் சோழர்சரித்திர ஆசிரியர் சிறப்புப்பாயிரத்தை நம்ப வில்லையென்று தோற்றுகிறது. அவ்வாறு வெளிப்படையாகவும் கூறவில்லை. ஆயினும், இவர் வீரசோழியத்துக்குப் பின்னர் இந்நூலை வைத்த முறையினாலும், பிறிதோரிடத்தில் கலிங்கத்துப்பரணியைக்குறித்துக் கூறுகின்றபொழுது அவற்றுள் காணப்படுஞ் சோழனைக்குறித்த செய்திகளெல்லாம் முதலாங்குலோத்துங்கனைக் குறித்தனவே[4] என்று பொருள்படும்படி எழுதுவதினாலும் இவர் முதலாங்குலோத்துங்கன்காலத்தவர் தண்டியாரெனக் கருதுகிறார். இதற்கு மாறாக இந்நூல் கூத்தருடைய காலத்ததென்றும், அக்காலத்துள் இரண்டாங்குலோத்துங்கனுடைய காலத்ததென்றும்[5] செந்தமிழ் கூறும். இவ்வாறு கண்டது 1904-ம் ஆண்டிலாம். அவ்வாறு கண்டதன்பின் முப்பத்தைந்து ஆண்டுகள் சென்றுவிட்டன. அதனை எழுதியவர்களுடையகருத்து வேறுபாடடைந்திருத்தலும் கூடும். ஆண்டுக் காணப்படும் கூற்றுக்களிலொன்று 'மலரிவருங் கூத்தன்றன் வாக்கு' என்பதில் மலரி கூத்தரது ஊர் என்பது; மற்றையது அபயன், அனபாயனென்பது. கூத்தன் என்பது ஒட்டக்கூத்தர் என்று கொள்ளுதற்குரிய சாதனமொன்றும் அக்காலத்துக் காட்டப்படவில்லை. இக்கொள்கைக்குப் பெருந்தடையாகநிற்பது தண்டியலங்காரநூலையும் உரையையும் வீரசோழியநூலாசிரியரும் உரையாசிரியரும் எடுத்தாண்டிருப்பதேயாம். அவ்விருவரும் ஒரேகாலத்தினரென்பது அறிஞர்பலரும் ஒப்புக்கொண்டதொரு செய்தியாகும்[6].

தடமார் தருபொழிற் பொன்பற்றி காவலன் றன்மொழிந்த
படிவீர சோழியக் காரிகை நூற்றெண் பஃதொடொன்றின்
திடமார் பொழிப்புரை யைப்பெருந் தேவன் செகம்பழிச்சக்
கடனாக வேசுவின் றன்றமிழ் காதலிற் கற்டவர்க்கே.

என்பது வீரசோழிய அந்தச்சிறப்பு.

---

[4] The Cholas. ii, 521.)

[5] இரண்டாங்குலோத்துங்கனதுகாலம் கி. பி. 1135—1146.

[6] சங்ககாலத்தமிழும் பிற்காலத்தமிழும்.

கூத்தனூரிற்காணப்படும் ஆதாரசிலைக் கல்லெழுத்தில் 'மலரி உடையார்' என்று காணப்படுகிறதே எனின்[7] இம் 'மலரிஉடை யார்' கவிச்சக்கரவர்த்திகள் பேரனார் கவிப்பெருமாளான ஓவாத கூத்தர்' ஆவர். அதுகொண்டு அச்சொல் ஒட்டகூத்தரைச்சுட்டிய தாகக் கருதலாகாது. ஆகவே மலரிவருங்கூத்தன் ஒட்டக்கூத்த னாகாது வேறொருவராதலும், அவர் கூத்தகந்தபெம்மானிடத்து அன்புடைய தண்டியாராதலும் காணலாம்.

தண்டியாசிரியர்காலம் வீரசோழியத்துக்கு முற்பட்டதாகவே, அக்காலம் இது என ஆய்ந்து முடிவுகட்டவேண்டியதே முறையும் கடமையுமாகும்.

ஆசிரியர் உதாரணப்பாடல்களிற் பலவற்றைத் தாமே பாடி யுள்ளாரென்பது அந்நூலை யோதுவார்க்குப் புலனாம். அந்நூ லுள்ளே பல செய்யுட்கள் அபயன், அனபாயன், சென்னி, கிள்ளி, செம்பியன் என்ற பெயர்களால் ஒரு சோழனைப் புகழ்ந்துசெல்லும்; சில செய்யுட்கள் கங்கைகொண்டசோழபுரம், கலிங்கப்போர் முதலியவற்றைக் குறிப்பனவாகும். அவை மீண்டுக் காட்டப் படும்.

கங்கைகொண்டசோழபுரம்.

வண்புயலைக் கீழ்ப்படுத்து வானத் தருமலைந்து
மண்குளிரச் சாயல் வளர்க்குமாம்—தண்கவிகைக்
கொங்கா ரலங்க லனபாயன் கொய்பொழில்சூழ்
கங்கா புரமாளி கை[8]

கலிங்கவெற்றி.

கோட்டந் திருப்புருவங் கொள்ள வவர்செங்கோல்
கோட்டம் புரிந்த கொடைச்சென்னி—நாட்டம்
சிவந்தன வில்லை திருந்தார் கலிங்கம்
சிவந்தன செந்தீத் தெற.

---

[7] செந்தமிழ், 25, 347.

[8] இச்செய்யுள் ஒற்றுப்பெயர்த்தல் என்னுஞ் சொல்லணிக்கு உதாரண மாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஒருவ ரொருவர்மேல் வீழ்ந்துவட நாட
ரருவ ரருவரென வஞ்சி—வெருவந்து
தீத்தீத்தீ யென்றயர்வர் சென்னி படைவீரர்
போர்க்கலிங்க மீதெழுந்த போது.

காடத்தான் மாரியுங் கண்ணால் வெயிலு
நிறைவயிரக் கோட்டா னிலவுஞ்—சொரியுமால்
நீளார்த் தொடையநல னேரார் கலிங்கத்து
வாளாற் கவர்ந்த வளம்.

மேற்குறித்த செய்யுள்களின் பிண்டப்பொருள், கங்காபுரத்தி லிருந்த சோழன் அபயன், அனபாயன் என்ற பெயர்களையுடையவன், கலிங்கத்தின்மேற் படையெடுத்துச்சென்றான். அப் படையெடுப்பைக் கண்டு கலிங்கர் அச்சங்கொண்டு ஓடினர். அச்சோழன் உலகமுழுதும் ஒருகுடைநிழலி லாண்டான்; ஜயமாதும் பூமாதும் அவனை விரும்பிச் சேர்ந்தனர்; அவன் மாலினும் பெரியோன்: என்பதாம்.

கங்காபுரம் கங்கைகொண்டசோழபுரமென்பது யாவரும் அறிந்ததே. அந்நகரை யுண்டாக்கியவன் இராஜராஜதேவன்மகனான இராஜேந்திரசோழதேவனென்பதும் விளக்கமானசெய்தி. இவ்வரசனுக்குக் கங்கைகொண்டசோழபுரம் மிக்க பெருமையுடையதொன்றாம். இவ்வரசனுக்குப் பின்வந்தாரும் இந்நகரிலே வாழ்ந்தனராயினும், அவர்களுடைய ஆட்சியன்று மேலேகண்டது. அவ்வரசன் வீரராஜேந்திரனுக்கு முற்பட்டவனாக இருத்தல் வேண்டுமென்பதும் கவனத்திற்குரியது.

வீரராஜேந்திரனுக்குமுற்பட்ட அரசர்களுள்ளே சோழராச்சியத்தைப் பெருக்கியவனென முதலாம் பராந்தகன் கங்கபாடி, நுளம்பபாடி, வடுகவழிமேற்கு: இவைகளைக் கைக்கொண்டு ஆண்டுவந்தானேயன்றி வடக்கிற் சென்று வேங்கிநாட்டையேனும் வென்றவனல்லன். முதன்முதலாகக் கலிங்கத்தை வென்றவனாகக் கூறப்படுபவன் முதலாம் இராஜராஜனே. இவன்,

'குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமு
மெண்டிசைபுக ழீழமண் டலமும்
...............திண்டிறல் வென்றித்
தண்டாற் கொண்டவன்.[9]

வேங்கிநாட்டுக்கு வடக்கிலுள்ளது கலிங்கம். இதுவும் 'இராஜ ராஜன் இராச்சியவருஷம் 16-ல் இவன்வசமாயிற்று' என்பர் கோபிநாதராயர்.[10]

கலிங்கவெற்றியைக் குறித்துப்பேசும்போது அவ[இராஜராஜ]னுடைய மகன் இராஜேந்திரசோழன் இதனை வென்றிருக்கவேண்டும். திருவாலங்காட்டுச் செப்பேடுகள், இராஜராஜனது ஆட்சியில் அவன் வீமன் என்ற ஓராந்திரவரசனை வென்றானென்று கூறுகின்றன. விமலாதித்தனுக்கு மும்மடிபீமன், விருதாங்கவீமன் என்ற பட்டங்களுண்டு: என ரணஸ்தபூண்டிச் செப்பேட்டினின்றும் அறிவோம். இவைகளையன்றிக் கலிங்கநாட்டைச் சார்ந்ததான கஞ்சம் ஜில்லா மஹேந்திரமலையிலுள்ள இரண்டு கல்வெட்டுக்கள், குளூதத் தலைவன் விமலாதித்தனை வென்று மஹேந்திரமலையைப்பிடித்துக் கொண்டு வெற்றித்தம்பமும் நாட்டினன் என்று கூறுகின்றன.

இவைகளால் ராஜராஜன் தன்னுடைய மகனான இராஜேந்திர சோழனைப் படையோடு அனுப்பினான் என்பது விளங்கும். ஆயினும், இராஜராஜன் வேங்கிநாட்டை இதற்குமுன்னரே வென்று சத்தியாசிரயனை அரசுகட்டிலேற்றி, அராஜகத்தை நீக்கியிருக்கின்றான். ஆதலாலே சக்திவர்மனைச் சேர்ந்த ஒருவன் உடனே கலகஞ்செய்தானென்பது அசம்பாவிதம். வேறுவிதமாக நடந்ததென்று காட்டும்வரை இராஜராஜனே முதலில் கலிங்கத்தை வென்றானென்றும், பின்னால் குளூதத்தலைவன் விமலாதித்தன் என்பான் கலகஞ்

[9] இராஜராஜன் மெய்க்கீர்த்தி.

[10] சோழவம்சசரித்திரம்.

செய்ய அவனை யடக்கிச் சத்தியாசிரயனுடைய ஆட்சியை வலுப் படுத்தும்பொருட்டு இராஜேந்திரன்படைத்தலைவர்கள் சென்றன ரென்றுங் கூறுவேன்: என்று எழுதுவர் வே. வேங்கையா.[11]

'மஹேந்திரமலையில் காலங்குறிக்காத இரண்டு கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன; அவை வடமொழியிலும் தமிழிலும் உள்ளன; அவை விமலாதித்தன் என்ற குளூத அரசன்மேல் இராஜேந்திர சோழன் படையெடுத்துச் சென்றமையைக் குறிக்கின்றன. இந்தத் தலைவன் கீழைச்சளுக்கிய அரசனான விமலாதித்தனது தலைவர் களுள் ஒருவனாக இருத்தல்கூடும். கல்வெட்டுக்கள் இராஜேந்திரன் பேரால் வெட்டப்பட்டுள்ளன; மகேந்திரமலையின் உயர்ந்தசிகரத் தில் வெற்றித்தம்பங்கள் நடப்பட்டதையும் கூறுகின்றன. ஆயி னும், இராஜேந்திரனது மெய்க்கீர்த்திகளில் இப்படையெடுப்புக் காணப்படவில்லை. இது அவனுடைய தந்தையின் அரசாட்சியில் நடந்ததால் இராஜராஜன் தான் கலிங்கம்வென்றதாகக் கூறக் காரணமாயிற்று: என்பர்[12] நீலகண்டசாஸ்திரிகள்.

மேலும், அவர், 'கிருஷ்ணசாஸ்திரி இந்தவெற்றியே இரா ஜேந்திரன் கங்கை[நீர்] தனது நாட்டிற்குக்கொண்டுவரக் காரண மாகவிருந்த'தென்று கூறுவர். (S. I. I. iii, 388, குறிப்பு 6). 'ஆயினும், இராஜேந்திரன் வென்ற நாடுகளில் குளூதநாடு காணப் படவில்லை' என்றும் எழுதுவர்.[13] ஆயினும் அவ்வாசிரியரே பிறிதோ ரிடத்தில் இராஜேந்திரனது திக்குவிஜயத்தில் கலிங்கத்தை அவன் அடிப்படுத்தியதாகவேனும் வென்றதாகவேனும் கூறவில்லை; எனி னும் இராஜேந்திரன் கங்கைசென்று திரும்பியபோது ஒட்டிரம் கலிங்கம்வழியாகத் திரும்பிவந்ததாகப் படம்போட்டுக்காட்டுவர்.[14]

---

11 தென்னிந்தியக் கல்வெட்டுக்கள், தொகுதி II முகவுரை.

12 The Cholas, i 219—220.

13 ஷை ஷை 220.

14 ஷை ஷை 248.

வெங்கையா கூறுமாறு இராஜேந்திரசோழன் தனது தந்தையின் காலத்திலேயே கலிங்கத்தை அடிப்படுத்தியிருந்தால், பின்னரும் அதனைக் கூறவேண்டா. அவன் வேங்கியையும் வென்றதாகக் கூறினானிலன். கலிங்கத்தை வென்றதன் சான்றாக கலிங்கத்தார்க்குச் சிறப்பாயுள்ள மகேந்திரமலையிலே கோகர்ணேசுராலயமதிலிலே இவனது கல்வெட்டுக்கள் காணப்படுவதோடு, சிதறுண்டு கிடக்கும் கற்களிலும் கல்வெட்டொன்று காணப்படுகின்றது. அக்கல்லெழுத்துக்களை ஆராய்வோம்.

ஜயதி நிஜவம்ஶ[ஶ்ராம்]திஷ்டே தாஸ்தேஜோ
பூர்ணதிமஹித ஶௌர்யாபரம்பூரதார்யா நவோஜ்ஜம்:।
15 விஶ்வேதியதீயம் யாஶோத்யோகம் ஸஜ்ஜம்
16 கலுஷ்ஷி ந ஶக்தே ஸ்ஸ ராஜேந்த்ரசோள:॥

நிர்வ்ருத்த நிஜவிக்ரமேண விஶ்வாஷிதம் கூர்மேஸ்வரம்
ஸம்ஹ்ருஷ்யாஷ்ரிணிஹாஸு கலிங்கபதிநாக[த்த]ாகரோவாரணாஸு।
ஸ்வாகஷ்ணபதிஜஸ்ஸஜ்ஜயிநா ராஜேந்த்ரசோளஸ்யஸஸு
ஶ்ரீ[ம்]பூராவே ஶிவரோ வ்யயத்த விஜயஸ்தம்பம் மஹேந்த்ராசலே॥

[இராஜேந்திரசோழனுடைய பிரகாசமான தேஜஸ் கலியினால் மிகவும் அழுக்கடைந்த உலகனைத்தையும் துலக்குகிறது; அந்த இராஜேந்திரசோழனுடைய சபையானது அவனால் வெல்லப்பட்ட அரசர்கள் தலைவணங்குவதால் நழுவிய மாலைகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது; அவ்வாறான இராஜேந்திரசோழன் சகல மேன்மைகளுடனும் விளங்குகிறான்.

உலகைவென்ற இராஜேந்திரசோழனுடைய தண்டநாயகனாகவிருந்துகொண்டு தன்பராக்கிரமத்தால் குளூதேசுரனை விமலாதித்தனைக் கைதுசெய்துகொண்டு மலைபோன்ற கலிங்க அரசனுடைய யானைகளைப் பிளந்து வானளாவிய மஹேந்திரமலையினுச்சியில் விஜயஸ்தம்பத்தை நாட்டினான்.]

---

15 விஶ்வயதி என்றிருக்கவேண்டும்.

16 கலிஶ்ஷிதி appears in the text.

A. தமிழ்.

1 னையும்எறி
2 ஹேந்திர
3 ண்டு ஸ்ரீஜஹேந்திர
4 த்தில் ஜயஸ்தம்பம் நாட்

B.

1 ஸ்ரீமாஹா
2 நாயக ராஜேந்திரசோழ
3 ப்பல்லவரையன்ராஜராஜமாராயன்
4 8ஹேந்திரபுரீஸ்வரத்துகொ
5 ண்டான்வி[ரா]ங்குச[மும்]விட்டி
6 வாரணமல்ல

C.

1 விமலாதித்தனை
2 யுங்கலங்கருத்தா.[17]

இத்தமிழ்க்கல்வெட்டுச் சரிவரப் பதிக்கப்படவில்லை. இதனைத் தலைகீழாகப் பதித்துள்ளார்கள். B தான் தொடக்கம். C அடுத்தது. A கடைப்பகுதி. அவ்வாறு சேர்ப்போமானால்,

> ஸ்ரீ ம(ா)ஹாநாயக ராஜேந்திரசோழப்பல்லவரையன் ராஜராஜமாராயன் மஹேந்திரபுரீசுரத்து[க்]கொண்டான் வீ[ரா][ங்]குச[மும்]வீட்டி வாரணமல்ல விமலாதித்தனையுங் கலிங்க[ரு]த்தானையும் எறி[ந்து ம]ஹேந்திர[க்கொ]ண்டு ஸ்ரீமகேந்திரத்தில் ஜயஸ்தம்பம் நாட்[டி]

என்று காணப்படும். அங்குசம் கலிங்கரது இலாஞ்சனையும் கொடியுமாகும். மஹேந்திரபுரீசுரமான கோகர்ணநாதேசுரம் கலிங்கரது சிறந்த க்ஷேத்திரம். மகாதண்டநாயகனான இராஜேந்திரசோழப் பல்லவன் ராஜராஜமாராயன் கலிங்கத்தின்மேற் சென்று வாரணமல்ல விமலாதித்தனையும் கலிங்கத்தானையும் வென்று மஹேந்திரபுரீசுரமான கோகர்ணநாதர்கோயிலின்முன்பு ஜயஸ்தம்பம் நாட்டினான் என்பது தமிழ்ப்பகுதி. வடமொழிப்பகுதியோ இராஜேந்திர

---

[17] 1896-ம் ஆண்டு 397 நிர். கல்வெட்டு. இதனுள் B 5-ல் கண்ட வி[ரா]ங்குச[மும்]விட்டி என்பவற்றுள் வி=என்பதை வீ என்று கொண்டால் பொருள் இனிது பெறுவோம். கலங்கருத்தா எனபது கலிங்கத்தா என்றிருக்க வேண்டும்.

சோழனது ஆட்சியிலே தண்டநாயகன் குளுதவிமலாதித்தனைச் சிறைகொண்டு கலிங்கவரசனுடைய மலைபோன்ற யானைகளைப் பிளந்து வானளாவிய மகேந்திரமலையினுச்சியில் வெற்றித்தம்பத்தை நாட்டினான் என்று கூறும். இதனையொத்த தண்டியலங்காரச் செய்யுள்,

'கரடத்தான் மாரியும்........வாளாற் கவர்ந்த வளம்' என்பது.

'கோட்டங்........ ....................செந்தீத் தெற'

என்ற செய்யுளும் நோக்கத்தக்கது.

தமிழ் ஸம்ஸ்கிருதம் இவைகளிற் காணப்படுஞ் சான்றுகளையன்றி, அக்கலிங்கநாட்டில் மஹேந்திரமலையிற் காணப்படும் கல்லெழுத்துக்களைத் தவிர்த்து வேறு சான்று காணப்படுகின்றனவாவென ஆராய்வாம். கலிங்கத்துப்பரணியிற்கண்ட அனந்தபன்மன் இரண்டு தானங்கள் செய்துள்ளான். அவைகள் செப்பிதழ்களில் வரையப்பட்டுள்ளன. அவை கோர்னிசெப்பேடுகள் எனப்படும். முதலாவது செப்பேட்டில்,

"காமார்ணவனுக்கு வைதும்ப அரசிளங்குமரியான வினயமகாதேவியிடமாகச் சீர்த்திவாய்ந்த வஜ்ரஹஸ்தன் பிறந்தான்; இவன் இடியேற்றினையொப்பப் பகைவரைவென்று 33-யாண்டு அரசுசெலுத்திவந்தான். இவன்மகன் இராஜராஜன் பகைவரையழித்துப் பலநற்குணங்களோடு கூடியவனாய் எட்டாண்டு அரசாண்டான், இவன் குபேரனையொத்த செல்வவான். இராஜேந்திரசோழன்மகளும் இராஜராஜன் பட்டமகிஷியுமான இராஜசுந்தரியினிடமாகப் பிறந்தவன் சோடகங்கன் என்னு மரசன். இவன் சகம் 999-ல் இந்தத் தானத்தைச் செய்தான்.[18]"

'பின்னர்[19] வஜ்ரஹஸ்தன் 33-யாண்டு அரசாண்டான். நிலவொளியையொத்த கங்கர்குலதிலகனான வஜ்ரஹஸ்தனது கீர்த்தி எங்கும்பரந்து மக்களுக்கு மகிழ்ச்சியையுண்டாக்கிற்று. சீதேவியை மார்பின்கண்ணேயுடையவனும் வஜ்ரமான இடியேற்றைக் கையின்கண்ணேயுடையவனும் திரிகலிங்காதிபதியுமான வஜ்ரஹஸ்தனையன்றி யாரே இந்திரனது வஜ்ராயுதத்தைத் தடுக்கவல்லார்?,

18 Journal of the Andhra His. Research Society. Vol. i, 47.
19 do do i, 123.

'இவன் நாவிலே கலைவாணி நடனமிடுகிறாள். இவனுடையமகன் 8 ஆண்டு அரசாண்டான். முதலில் இவன் திராவிடரோடு இட்டபோரில் ஜய மாதை மணந்தான்; பின்னர் சோழ அரசன்மகளான இராஜசுந்தரி யை மணந்தான். விஜயாதித்தன் மாலைவெய்யிலையொப்ப வயது முதிர்ந்தவனானமையின்,மேல்கடலையொத்த வேங்கியைவிட்டுச் சோழரா லுண்டான துழப்பக்கடலில் முழுகும்பொழுது ஒறுத்தார்க்குப் புக லான இராஜராஜன் மேல்நாட்டிலேயே அவனை (விஜயாதித்தனை)ச் சுகமாக வாழும்படி செய்தான். அவனுடைய [இராஜராஜனுடைய] மூத்தமகனான சோடகங்கன்[20] கங்காகுலவனசம், நற்குணதீபன் உலகினைக் காக்கும்பொருட்டுச் சகம் 999-ல் அரசுகட்டிலேறினான்.'

மேற்கூறிய செப்பேட்டுப்பகுதிகளினின்றும் இராஜேந்திர சோழனோடு போரிட்ட கலிங்கவரசன் வஜ்ரஹஸ்தன்மகனான இராஜராஜனென்பது விளங்கும். இவனே சகம் 991க்குச் சரியான கி. பி. 1069-70-ல் அரசாட்சிக்கு வந்தான். இராஜேந்திரசோழ தேவனே கி. பி. 1012-1044-ல் அரசாண்டவன். ஆதலால் இந்தப் போர் இராஜராஜன் இளவரசனாகவிருந்தபொழுதோ அதற்கு முன்னரோ நடந்திருக்கவேண்டும். கலிங்க இராஜராஜனுடைய தந்தையான வஜ்ரஹஸ்தனே கி. பி. 1036-ல் அரசுகட்டிலேறினான். அதற்குமுன்னரே இந்தக் கலிங்கப்போர் நடந்திருக்கவேண்டும். அன்றியும்,கலிங்க இராஜராஜன் இளமையுடையோனாயுமிருந்திருத் தல்வேண்டும். அவ்வாறிருந்தமையாலேயே இராஜேந்திரசோழ தேவனுடைய இரண்டாவது மகளான இராஜசுந்தரியைப் பின்னர் இவன் மணஞ்செய்துகொள்வதற்கு இயன்றது. இவைகளையன்றி யும் கலிங்கநாட்டை வென்றவன் சோழஇராஜராஜனென்று கூறுவ தாலும் இராஜேந்திரசோழனுடையகாலத்தில் கலிங்கத்தைக் குறித்த செய்தியே காணப்படாமையாலும் இப்போர் நிகழ்ச்சி இராஜராஜனுடைய ஆட்சியில் சற்றேறக்குறைய கி. பி. 1010க்கு அண்மையில் நடந்திருக்கவேண்டும். ஆகவே இதுகாறும் கூறியது கொண்டு கலிங்கப்போரை நடத்தியவன் இராஜேந்திரசோழ தேவனே என்றேற்படும். இவனே தண்டியலங்காரத்திற் கண்ட அபயன், அனபாயனாவான்.

---

20 இவன் அனந்தவன்மன் சோடகங்கன் என்று அழைக்கப்படுவான்.

இவன் அனபாயன் என்ற பேராலேயே தமிழ்நாட்டில் வழங்கப் பட்டான் என்பதற்கு மற்றொரு சான்றாகநிற்பது மேற்கூறிய தண்டியலங்காரத்திலே கண்ட 'பூதலத்துள்' என்ற முதனிலைப்பை யுடைய செய்யுள். இது, காவ்யாதர்சத்தில்,

> *நஷ்டேயம் நரேந்த்ரம் ஜநாஸீதி கஜாவந ।
> ஸ்வேவ ஶ்வேதா ஸ்ரூஹதிய தஸ்வ ஜந ஶயிம்நஃ ॥

என்று காணப்படுகிறது. நரேந்திரன் என்ற சொல்லே இவர் அக் காலத்திலே கீர்த்தியுடன் வாழ்ந்த அரசனுன அனபாய னென்று சுட்டினர் என்று கொள்வதில் இழுக்கேனும் தவறேனும் சிறிது மிலது. ஆகவே இதுகாறும் கூறியவற்றால் தண்டியலங்கார நூலாசிரியர் இராஜேந்திரசோழதேவன்காலத்தவராவரென்பதும் அவர் தமது நூலிற் சுட்டிய அரசனுன அனபாயனும் சென்னியும் இராஜேந்திரசோழதேவனேயாவானென்பதும் இவ்வுரைநடையால் விளக்கமாகும்.

---

* இந்தச்சுலோகத்தின் முன்பாதி, "நஷ்டம் ஏவ நரேந்த்ரகவம் ஜநாவஸீதி கஜாவந" என்றுள்ளது. [பத்திராசிரியர்.]

ஸ்ரீ:

# வான்மீகரும் தமிழும்.

[௩௬0-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

## VIII. தடையும் விடையும்.

வான்மீகரும் தமிழும் என்ற இவ்வாராய்ச்சியின் முடிவான பொருள், இராமாயணகாலத்திலும் அதற்குமுற்பட்ட காலங்களிலும் தமிழ்மொழியானது மானுஷபாஷை (மானிடர்மொழி) என்னும் பெயரால் இமயந்தொடங்கி இலங்கையளவான நாடுகளிலெல்லாம் மானிடரால் தாய்மொழியாகப் பேசப்பட்டுவந்ததென்பதும், அதனால் வான்மீகர் வசிட்டர் அகத்தியர் தொல்காப்பியர் முதலான அந்தணர்குலத்தவரும், மனு இக்ஷ்வாகு சிபி ரகு ராகவன் முதலான அரசர்குலத்தவரும், சுமந்திரன் வெண்ணைச்சடையவள்ளலின்மரபினர் முதலிய அமைச்சுரிமையுடைய வேளாண்குலத்தவரும் தமிழர் (திராவிடர்) என்பதும், இவர்கள் பூர்வகாலத்தில் தென்னாட்டில் (திராவிடநாட்டில்) நின்றும் வடநாடுசென்று பரவினவரென்பதுமாம்.

இம்முடிபிற்கு மாறுவனபோலத் தோன்றும் தடையுரைகளும் சில உள்ளன.

அவற்றுள், முதலாவது தடையுரை: தொல்காப்பியச்சிறப்புப்பாயிரத்துள் 'வடவேங்கடம் தென்குமரி' என்று சொல்லப்பட்டவற்றைத் தமிழ்நாட்டெல்லையெனக்கொண்டு, வேங்கடத்தின் வடக்கிலுள்ளநாடுகளும் குமரியின் தெற்கிருந்த நாடுகளும் தமிழ்நாடாகாது பிறநாடாகவே இராமாயணகாலத்திலும் இருந்தனவென்பதும், அதனால் மானுஷபாஷையென்று வான்மீகத்திற் சொல்லியிருப்பது தமிழின்வேறான பிறபாஷையாயிருக்கலாம் என்பதும் ஆம். இதற்கு விடையுரை வருமாறு.—

தொல்காப்பியச் சிறப்புப்பாயிரத்துள், 'வடவேங்கடந் தென்குமரி யாயிடை' என்ற தொடர் தமிழ்நாட்டெல்லை கூறியதன்று.

அது நூலுக்குரிய சிறப்புப்பாயிரவுறுப்பாயிருத்தலால், அப்பாயிரவுறுப்புக்களாகிய ஆக்கியோன்பெயர் முதலிய பிறவுறுப்புக்களெல்லாம் ஒவ்வொருநூலுக்கும் வெவ்வேறாக மாறிவருவதுபோல "எல்லை" என்னும் இவ்வுறுப்பும் ஒவ்வொருநூலுக்கும் வெவ்வேறாக மாறுபட்டுவருதல்கூடும். (அதாவது:—தொல்காப்பிய நூலுக்கு ஆக்கியோன்பெயர் தொல்காப்பியர், நன்னூலுக்கு ஆக்கியோன்பெயர் பவணந்திமுனிவர் எனப் பெயர்வேறுபடுவதுபோல ஒவ்வொருநூலுக்கும் அவ்வந்நூல்வழங்கும் நிலங்களின் எல்லையும் வேறுபட்டிருப்பின் அதனை விளங்கச்சொல்லவேண்டும் என்பது.) அங்ஙனம் வேறுபடாமல் தமிழ்நூல்களுக்கெல்லாம் எல்லை ஒருபடியேயிருக்குமாகில் அது சிறப்புப்பாயிரவுறுப்பாகாது பொதுப்பாயிரவுறுப்பிற்சேர்த்து எண்ணப்பட்டிருக்கவேண்டும். (அங்ஙனம் பொதுப்பாயிரவுறுப்புள் ஒன்றாக எல்லை எண்ணப்படினும், அதனால் ஒரு பயனும் இன்றாம்.) அங்ஙனம் பொதுப்பாயிரவுறுப்பிற் சேர்த்தெண்ணப்படாமல், எல்லை சிறப்புப்பாயிரவுறுப்பிற் சேர்த்தெண்ணப்பட்டிருத்தலால், அது தமிழ்நாட்டெல்லையாகாதென்றும், அவ்வத் தமிழ்நூல்வழங்குதற்குரிய நிலவெல்லையேயாமென்றும் அறியவேண்டும்.

அன்றியும், உரையாசிரியர்கள், ஆக்கியோன்பெயர் என்பது நூலாசிரியன்பெயர் என்றும், வழியென்பது நூல்வந்த வழி யென்றும் கூறியதற்கியைய, எல்லையென்பது நூல்வழங்கும்(நிலத்தின்) எல்லை என்னுங் கருத்தினராய், ('வடவேங்கடம் தென்குமரி' என்னும்) 'இவை அகப்பாட்டெல்லை'* என்றும் கூறுவாராயினர்.

அகப்பாட்டெல்லையாவது: புறப்பாட்டெல்லையான பெருநான்கெல்லைக்குட்பட்டதொரு சிறுநான்கெல்லையாம்.

இவ்வெல்லைகளைப் பண்டைக்காலத்தார் எழுதிவந்த ஒற்றிக்கலன்† விற்றறகலன்‡ முதலியவற்றில் விளங்கக் காணலாம்.

---

* தொல்காப்பியச் சிறப்புப்பாயிரத்துக்கு இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் எழுதிய உரைகளை நோக்குக.

† ஒற்றிப்பத்திரம். ‡ இரயப்பத்திரம்.

ஆகவே, தொல்காப்பியச்சிறப்புப்பாயிரத்திற் சொல்லிய எல்லையானது அத்தொல்காப்பியநூல் வழங்குதற்குரிய அகப்பாட்டெல்லையான தமிழ்நிலவெல்லையாவதல்லது அந்நிலவெல்லையின் புறப்பாட்டெல்லையான தமிழ்நாட்டெல்லையன்றென்று அறியக்கிடக்கிறது.

இங்ஙனம் ஒவ்வொருநூலுக்கும் சிறப்புப்பாயிரத்து அவ்வந்நூல்வழங்கும் நிலவெல்லை சொல்லவேண்டியது எற்றுக்கெனின்? வெவ்வேறு நிலவலயங்களுள் வெவ்வேறுவகையான தமிழ்வழக்கு நிகழுமாதலால் அவ்வந் நிலவழக்கறிந்து அதுகொண்டு நூலியற்றினால் அந்நூல்பயில்வார் இந்நிலவழக்குக்கொண்டு இந்நூலியற்றப்பட்டதென்று தெரிந்து குறைகூறார். அங்ஙனம் அறியாக்கால், அவரறிந்த பிறநிலவழக்குக்கொண்டு அந்நூல் பிழைபட்டதென்று இகழுவர்.

சோதிடநூல்வல்லானொருவன் ஒரு பஞ்சாங்கம் கணிப்பானாயின் அப்பஞ்சாங்கம் வழங்குதற்குரிய நிலவெல்லை கூறுக்கால் அவனிருந்து கணித்த நாட்டினின்றும் பிறநாடுகளிலெல்லாம் அப்பஞ்சாங்கம் பிழைபடுவதாகும். இதனை விந்தியமலையின் வடபாலாரும் தென்பாலாரும் தனித்தனி வழங்கிவரும் வருடப்பெயர் வேறுபாட்டால் அறியலாம்.

அங்ஙனமே, மிளகு ஏலம் கோதுமை முதலிய பயிர்நூலெழுதுமொருவன், அவ்வப் பயிர்விளைவிற்குரிய நிலவெல்லை கூறுக்கால், அவ்வப் பயிர்விளைவிற்குரியவாகாத பிறநாட்டாரும் அவ்வந்நூல்கொண்டு முயன்று பயன்பெறுதொழிவர்.

அவ்வாறே எடுத்தல் முகத்தல் நீட்டல் அளவைகள் நாடுதோறும் வேறுபட்டுவழங்குதலால் அவ்வவ்வளவைவாய்பாடு பற்றியெழுதப்படும் நூல்களுக்கும் (அவ்வவ்வளவை வழங்கும்) நிலவெல்லை கூறவேண்டும். அல்லாக்கால் அவை கற்பார் பிறழ உணர்வாரும் மயங்குவாரும் ஆவர்.

அங்ஙனம் பிறழவுணராமைப்பொருட்டும் மயங்காமைப் பொருட்டும் வழக்குநூல்களுக்கு அவ்வந்நூல்வழங்கும் நிலவெல்லை கூறவேண்டிற்று.

இதனை, தொல்காப்பியர்காலத்து அத்தொல்காப்பியநூல் வழங்கும் தமிழ்நிலமாயிருந்த மலைநாடு, பிற்காலத்தில் வழக்கு வேறுபட்டமையால் அதனை விலக்கி, ('வடவேங்கடம் தென்குமரி யாயிடை' என்னாது) 'குணகடல் குமரி குடகம் வேங்கடம்' என்று நன்னூல்வழங்குதற்குரிய தமிழ்நிலவெல்லை வேறுகூறப்பட்டிருப் பதுகொண்டு அறியலாம்.

'குணகடல் குமரி குடகம் வேங்கடம்' என்பது தமிழ்நாட் டெல்லையாகமாட்டாது; அக்காலத்து மலைநாடும் தமிழ்நாடேயாத லால்.

இவ்வாறே தொல்காப்பியர்காலத்தில் உலகமுழுதும் தமிழ் நாடாயிருப்பினும், அது பலவேறு மண்டிலங்களாய்ப் பகுக்கப் பட்டுத் தமிழ்ப்பாஷை சிறிது சிறிது வேறுபட்டுக்கொண்டுவந்தது கண்டு அதனைப் பாதுகாக்கவேண்டிச் செந்தமிழ்நாட்டு மும் மண்டலத்தரசரும் கூடித் தமிழ்ச்சங்கம் நிறுவித் தமிழாராய்வுழி, அத்தமிழாராய்ச்சிக்கு அதிகாரவரம்புகட்டவேண்டி வடவேங்கட மும் தென்குமரியும் எல்லையாகக்கொள்ளப்பட்டன.

அவ்வெல்லைக்குட்பட்ட தமிழ்நாட்டுள்ள வழக்கும் செய்யு ளும் ஆராய்ந்து தொல்காப்பியரால் இலக்கணம்சொல்லப்பட்டமை யால் அந்நூலுக்கு அவை நூல்வழங்கும் நிலவெல்லையாகப் பனம் பாரனாரால் செய்யப்பட்ட சிறப்புப்பாயிரத்துட் சொல்லப்பட்டன.

இக்காலத்தும் கல்விவளர்ச்சிகருதிய பல்கலைக்கழகங்களும் ஆட்சிநிலவெல்லை கட்டிக்கொண்டு வகுப்புத்தோறும் கற்பித்தற் குரிய பாடபுத்தகங்களைத் தெரிந்தெடுத்துக் கற்பித்துவருதல் காணலாம்.

இவ்வாறே முற்காலத்திலும் உயர்தரத்தமிழ்க்கல்வி கற்பிக் கும் வகுப்பைக் கீழ்வகுப்பு மேல்வகுப்பு என இரண்டுபிரிவு படுத்திக் கீழ்வகுப்புக்குரிய பாடபுத்தகங்களுக்குக் கீழ்க்கணக்கு என்றும், மேல்வகுப்புக்குரிய பாடபுத்தகங்களுக்கு மேற்கணக்கு என்றும் பெயரிட்டு வழங்கியுள்ளார்கள்.

கணக்கு என்னும் பெயர் இக்காலத்தில் எண்ணுநூல்குறித் தியலுமாயினும், முற்காலத்தில் எழுத்துநூல்குறித்தும் இயன்ற தென்பதை எழுத்துநூலாகிய அரிச்சுவடியை நெடுங்கணக்கு என் றும், பாடங்கற்பிக்கும் ஆசிரியனைக் கணக்காயனார் என்றும் வழங்குதலால் அறியலாம்.

பாடங்கற்பிக்கும் ஆசிரியர்க்குக் கணக்காயர் என்று பெய ருண்மை, 'கற்றதூஉமின்றிக் கணக்காயர் பாடத்தால்'* என்பத னாலும் புலனாம்.

மேலும், கீழ்க்கணக்கு மேற்கணக்குநூல்களைத் தெரிந்தெடுப் பதற்கு அவை இன்ன இயல்புடையவாயிருக்கவேண்டுமென்று அவ்வவ்வகுப்பின் தகுதிக்கேற்குமாறு தொன்றுதொட்டே இலக் கணம் சொல்லப்பட்டுவருகிறது. அதனைப் பின்வருவனவற்றால் அறியலாம்.

'மேற்கீழ்க் கணக்கென விருவகை கணக்கே' (173)

'மேற்கணக் கெனவும் கீழ்க்கணக் கெனவும்
பாற்படும் வகையாற் பகர்ந்தனர் கொளலே' (174)

'அகவலுங் கலிப்பா வும்பரி பாடலும்
பதிற்றைந்தாதி பதிற்றைம்ப தீரு
பிகுத்துடன் றெதப்பன மேற்கணக் கெனவும்
வெள்ளைத் தொகையும் அவ்வகை யெண்பெறின்
எள்ளறு கீழ்க்கணக் கெனவும் கொளலே' (175)

'ஐம்பது முதலா வைந்நூ றீரு
வைவகைப் பாவும் பொருணெறி மரபிற்
றொதந்கப் படுவது மேற்கணக் காகும்' (176)

'அடிநிமிர் பில்லாச் செய்யுட்டொகுதி
யறம்பொரு ளின்ப மடுக்கி யவ்வத்
திறம்பட வுரைப்பது கீழ்க்கணக் காகும்' † (177)

என்பது பன்னிருபாட்டியல்.

---

* நாலடியார். அதி. 32. அவையறிதல். செய். 4.

† இவ்விலக்கணங்கள் புதியநூல்களியற்றுவார் குறிக்கோடற்குச் சொல்லப்பட்டனவல்ல; தமிழ்நூல்பயிலு மாணவர்வகுப்பிற்கு உரிய பாட புத்தகங்களைத் தொகுத்துதவுவார் குறிக்கோடற்கே சொல்லப்பட்டன. இது பதினெண்கீழ்க்கணக்கு முதலியவற்றை உய்த்துநோக்கிற் புலனாம்.

இவ்விலக்கணங்கொண்டே கடைச்சங்ககாலத்தும் கீழ்க் கணக்கும் மேற்கணக்கும் தெரிந்தெடுத்துத் தொகுத்துக் கற்பிக் கப்பெற்றன.

இங்ஙனம் கொள்ளாக்கால் கீழ்க்கணக்குநூல்களுக்கும் மேற் கணக்குநூல்களுக்கும் இலக்கணம் சொல்லியிருப்பது பயனில் கூற்றாய்முடியும் அங்ஙனம் அவ்விலக்கணம் பயனில்கூற்றாய் முடிதல் கூடாது; ஆதலால் அது பயப்படுமாறு, சங்ககாலங்களில் செந்தமிழ்வளர்ச்சிகருதிய அகத்தியர் முதலாயினோர் அச்செந் தமிழியற்கை சிவணியநிலத்துக்கு எல்லையான வடவேங்கடம் தென் குமரிக்கு இடைப்பட்டிருந்த நிலப்பரப்பிற்கு வடவேங்கடந் தென் குமரியை ஆட்சிநிலவெல்லை (jurisdiction) ஆக்கிக்கொண்டு தமி ழாராய்ச்சிசெய்து நூலியற்றியருளினமையால் அந்நிலப்பரப்பே அந்நூல்வழங்கும் நிலமாயிற்று என்று கொள்ளல்வேண்டும்.

தொல்காப்பியனார், 'வடவேங்கடம் தென்குமரிக்குட்பட்ட இந்நிலத்தையே *'செந்தமிழ்சேர்ந்த பன்னிருநிலம்' என்றார்†. எனவே இவற்றின் புறம்புள்ளநிலங்களும் தமிழ்நிலமேயாயினும், அவை செந்தமிழ்சேர்ந்தனவாகாது பிறதமிழ்நிலமாம் என்பதும் பெறப்பட்டது.

வடவேங்கடம் தெங்குமரிக்குட்பட்ட 'செந்தமழ சோநத பன்னிருநிலம்':—

---

* தொல். சொல். எச்சவியல். சூத்திரம். 4.

† சேனாவரையர், தொல்காப்பியச் சொல்லதிகாரத்து எச்சவியலின் 2-ஆம் சூத்திரவுரையுள், 'செந்தமிழ்நிலமாவன:—வையையாற்றின்வடக்கும் மருதயாற்றின்தெற்கும் கருவூரின்கிழக்கும் மருவூரின்மேற்குமாம்' என்றாரா லெனின், அது ஆனுவறிவிற் சேனாவரையருரையன்று; சிறப்புப்பாயிர வுறுப்பாக ஒவ்வொருநூலுக்கும் அவ்வந்நூல்வழங்கும் நிலவெல்லை தனித் தனி கூறப்படவேண்டுமென்னும் நியமம்பற்றி ஏதோ ஒருநூற்குப் பிற்காலத் தார் அந்நூல்வழங்கும் நிலஎல்லையாகக் கூறியதனைச் செந்தமிழ்நிலவெல்லை யாகப் பிறழவுணர்ந்தாரொருவரால் இடைச்செருகப்பட்ட போலியுரை யாகத் தோன்றுகிறது.

'தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி
பன்றி யருவா வதன்வடக்கு—நன்றாய
சீதம் மலாடு புனனாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண்'

எனவரும் பழம்பாடலாற் சொல்லப்பட்டனவாம்.

இதனுள், 'தென்பாண்டியென்பது பாண்டிநாட்டின் தென் பகுதியையுணர்த்தாது, தேன்குமரியென்பதுபோல இயல்படை புணர்ந்து பாண்டிநாட்டினை யுணர்த்திநின்றது.

செந்தமிழ்சேர்ந்த பன்னிருநிலத்தும் என்பதற்குச் செந்தமிழ் நிலத்தைச்சேர்ந்த (பிற) பன்னிருநிலத்தும் என்பது பொருளன்று; செந்தமிழ்வழங்கும் பன்னிருநிலத்தும் என்பதே பொருளாம்.

செந்தமிழ்நிலத்தைச்சூழ்ந்த (பிற) பன்னிருநிலத்தும் என்பது ஆசிரியர் தொல்காப்பியர் கருத்தாயின் அவர், அது புலப் படச் 'செந்தமிழொழிந்த பன்னிருநிலத்தும்' என்று சூத்திரம் வகுத்திருப்பர். அங்ஙனமின்றிச் 'செந்தமிழ்சேர்ந்த பன்னிருநிலத் தும்' என்று சூத்திரித்தமையான் அவர்க்கு அது கருத்தன்மை புலனாம். சேர்தற்றொழில் அகநிலையாய் ஒன்றுபடுதற்குரிய அடைத லாவதல்லது புறநிலையாய் வேறுபடுதற்குரியதாகாது.

அன்றியும், செந்தமிழ்நிலம் பன்னிரண்டையும் விளக்க எழுந்த மேற்குறித்த பழம்பாடலும், 'செந்தமிழ்தீர் ஏதஞ்சேர் பன்னிருநா'டென்று வழங்காமல், 'செந்தமிழ்சேர் ஏதமில் பன்னிரு நா'டென்றுவழங்கி ஆசிரியர் தொல்காப்பியர்கருத்தை வலியுறுத்தி நிற்றலும் நோக்கத்தகும்.

நூலுக்குச் சிறப்புப்பாயிரவுறுப்பாக நூல்வழங்கும் நிலஎல்லை ஒவ்வொருநூலுக்கும் வெவ்வேறுநிலவழக்குப்பற்றி வெவ்வேறு கூறப்படவேண்டுமென்பது பெறப்பட்டமையால் தொல்காப்பியத் தின் முற்பட்ட பழையகாலத்தில் தமிழ்நிலப்பரப்பு மிக விரிந் திருந்ததென்பதும், அதனாற் பலவேறு தமிழ்நாடுகளிலும் தமிழ் வழக்கு வெவ்வேறுவகையாக வழங்கப்பட்டிருக்கவேண்டுமென்ப தும் போதரும்.

வேங்கடத்துக்கு வடக்குள்ள நாடுகளிலும் தமிழ்வழக்குண்டு என்பதைப் பின்வருவனவற்றாலும் அறியலாம்.

வேங்கடத்தின் வடநாட்டுள்ள வடபெண்ணை, தொழுனை என்னும் யாறுகள், பொன்னி பொருநை வையையென்பனபோலத் தமிழ்ப்பெயரால் வழங்கப்பட்டமையால் அவ் யாறுள்ள நாடுகள் முற்காலத்தில் தமிழ்நாடாகவே இருந்திருக்கவேண்டும். அல்லாக்கால் அவற்றிற்கு அப்பெயர்வழக் கில்லையாம்.

இமயத்தின் ஒருபகுதிக்குக் குயிலாலுவம் என்னும் தமிழ்ப் பெயர் இருந்ததாகச்* சிலப்பதிகாரத்துட் காணப்படுதலால் பிற் காலத்திலும் ஆங்குத் தமிழ்வழக்கிருந்ததென் றறியப்படுகிறது.

அகத்தியனார் கயிலாயத்துநின்றே தமிழ்பயின்றவராய் ஈங்கு வந்தமையால் அவ் வடநாட்டுள் முற்காலத்தும் தமிழ்வழங்கிற் றென்பது சொல்லவேண்டாதாயிற்று.

அன்றியும், அகத்தியர் அழைத்துவந்த அரசர் பதினெண் மரும் பதினெண்குடிவேளிரும் தமிழரல்லாத பிறராயின், அவர் இங்குவந்தபின் அவர் பாம்பரையோரெல்லாரும் பேசிவந்த பிற பாஷை ஒன்றும் காணப்படாமையின் அவரும் தமிழரேயாவர்.

வடநாட்டிற்றோன்றிய குடம் முதலிய கூத்துக்களின்பெயர் தமிழ்மொழியாயிருத்தலால் அக்கூத்துக்களையெடுத்தாளுதற்குரிய நாடகத்தமிழ்நூல்களும் அங்குத் தோன்றியிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

அத்தினபுரத்தில் தருமபுத்திரனைக் கௌதமன் பாடின பாட்டுப் †புறநானூற்றில் உண்மையால் குருநாடும் தமிழ்நாடாயிருந்த தென்றும், அங்கும் தமிழ்ச்செய்யுளின்பமறிவோரும் தமிழரசரிருந்தன ரென்றும் அறியலாம்.

அன்றியும், கௌரவர் நிரைகோடலாலும், கண்ணன் விடையேறு தழுவலும் குடக்கூத்தாடுதலும் உண்மையாலும் வடநாட்டுத் தமிழ்வழக்குண்மை அறியத்தகும்.

---

* சிலப்பதிகாரம், காதை. 28, அடி. 102. † 366.

பிற்காலத்தும் உஜ்ஜயினியில் பல்லாயிரம் தமிழக்குடிகள் இருந்தமை †பெருங்கதையால் அறியப்படுகிறது.

மணிமேகலையுள் நாகநாட்டரசனொருவன் வளைவணன் என்றும், அவன்மனையாள் வாசமயிலை என்றும், அவன்மகள் பீலிவளை என்றும் தமிழ்ப்பெயர்கொண்டு வழங்கப்பட்டமையால் அந்நாடும் தமிழ்நாடாயிருந்ததென்றும், அந்நாகசாதியாரும் தமிழராயிருந் தார்களென்றும் அறியத்தகும்.

இவ்வாறு தமிழ், வேங்கடங்கடந்த வடநாடுகளிலும், குமரி கடந்திருந்த தென்னாடுகளிலும் வழங்கப்பட்டமையால் வடவேங் கடம் தேன்குமரி' என்பன தமிழ்நாட்டெல்லையாகாது தொல் காப்பியநூல் வழங்குதற்குரிய அதிகாரவரம்பென்னும் நில வெல்லையாமென்பது புலனாகும்.

ஆதலால், தொல்காப்பியர்காலத்தில் வேங்கடம் குமரிக்குட் பட்ட தமிழ்நாட்டுள் வழங்கிய தமிழ்வழக்குப்பற்றியே அவர் நூ லியற்றினர்.

அவர் சொல்லாத பாட்டியல் முதலிய பிற தமிழிலக்கணங்க ளும் தொல்காப்பியத்தின் வேறுபட்ட திணைதுறைகளும் சீர்தளை கோடல்முதலிய செய்யுளிலக்கணங்களும் பாவினவிகற்பங்களும் அணியிலக்கணங்களும் பிறதமிழ்நாட்டினின்று வந்தனவாகவேண் டும்.

பாட்டியலிலக்கணம் பண்டுமுண்மை வான்மீகிமுனிவர் முதலிய வடநாட்டார்நூலுள் முதற்கண் மங்கலமொழிவழங்குத லாலும் அறியலாம். வான்மீகியார்பாடிய பரிதிசூழ்ந்த என்னும் புறப்பாட்டினும் பாட்டியன்மரபுபற்றிய மங்கலமொழி வழங்கப் பட்டுள்ளது.

இன்னோரன்னகாரணங்களால் வேங்கடம் குமரி யென்பன தமிழ்நாட்டெல்லயன்றென்றும், தோல்காப்பியநூல்வழங்குதற்குரியநில வெல்லையாம் என்றும், வேங்கடம் குமரி இவற்றுக்குப் புறம்பான நிலங்களிலும் தமிழ்மொழி முற்காலத்திற் சிறிது வேறுபட வழங்கப்பெற்றதென்றும் வெளியாம்.

† மகதகாண்டம். 4. புறத்தொடுக்கியது. அடி. 10–11.

இரண்டாவதுதடை, தமிழைத் தென்மொழியென்றும் திராவிடமென்றும், ஸம்ஸ்க்ருதத்தை வடமொழியென்றும் ஆரியமென்றும் வழங்குதலால் தமிழ் திராவிடநாடாகிய தென்னாட்டுக்கே உரியதென்றும், ஸம்ஸ்க்ருதம் ஆரியநாடாகிய வடநாட்டுக்கே உரியதென்றும் கூறுவது. அது பொருந்தாது.

தமிழ் தேன்னாட்டிலிருந்த சங்கப்புலவரால் ஆராய்ந்து இலக்கணம்வகுத்தமைத்துக்கொள்ளப்பெற்றமையால் தேன்மொழி எனவும், ஸம்ஸ்க்ருதம் வடநாட்டிலிருந்த தெய்வப்புலவராலாராய்ந்து இலக்கணம்வகுத்தமைத்துக்கொள்ளப்பெற்றமையால் வடமொழி என்றும் தேவபாஷையென்றும் பெயர்பெற்றன.

வடநாடு ஆரியநாடாதலால் வடமொழி ஆரியம் எனவும், தென்னாடு திராவிடநாடாதலால் தமிழ்மொழி திராவிடம் எனவும் பெயர் பெற்றன.

பிற்காலத்தில் இவ்விருநிலவாழ்க்கைபற்றியே அந்தணருள் விந்தியத்தின் வடபாலார் ஆரியரென்றும், தென்பாலார் திராவிடரென்றும் வழங்கப்பெற்றுள்ளார்கள். இதனால் இப் பிற்காலநிலையில் விந்தியமளவும் தமிழ்மொழி வழங்கப்பெற்றிருந்ததென்று அறியக் கிடக்கிறது. வடநாட்டார் தமிழைப் பிழைபடப் பேசத்தொடங்கிய காலந்தொட்டு அவரைத் தமிழர், ஆரியரென வழங்கிவருகின்றனர். அவர்பேசும் தமிழ் நகைச்சுவைக்கு உதாரணமாயிற்று.

மேற்கூறியவற்றால் தென்மொழியென்பது தென்னாட்டுக்கே யுரியதன்றென்பதும், வடமொழியென்பது வடநாட்டுக்கே உரியதன்றென்பதும் விளங்கும்.

திரு. நாராயணையங்கார்,

பத்திராசிரியர்.

தா(யா)ராநகரவேந்தன் போஜதேவன் இயற்றிய

# ஸரஸ்வதீகண்டாபரணம்

## (கலைமகள் கழுத்தணி)

[௩௩௮-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

### [வாக்கியக்குற்றம்—16.]

ஶப்தஹீநம் க்ரமப்ரஷ்டம் விஸந்தி புநருக்திமத் ।
வ்யாகீர்ணம் வாக்யஸங்கீர்ணமபதம் வாக்யகர்பிதம் ॥ ௧௫ ॥

பிந்நலிங்கம் பிந்நவசநம் ந்யூநோபமமதிகோபமம் ।
பக்நச்சந்தோ யதிப்ரஷ்டமஶரீரமரீதிமத் ॥ ௧௬ ॥

வாக்யஸ்யைதே மஹாதோஷா: ஷோடஶைவோபகீர்திதா: ।

1. சப்தஹீனம் (வழூஉச்சொற்புணர்த்தல்), 2. கிரமப்பிரஷ்டம் (முறைகெடக்கூறுதல்), 3. விஸந்தி (புணர்ச்சிவழு), 4. புநருக்திமத் (கூறியதுகூறல்), 5. வியாகிர்ணம் (வேற்றுமை மாறுபடக்கூறுதல்), 6. வாக்யஸங்கிர்ணம் (ஒருவாக்யத்தின் மொழிகள் வேறுவாக்யத்துக் கூறப்படுதல்), 7. அபதம் (கொச்சைச்சொற்களை வழங்குதல்), 8. வாக்யகர்ப்பிதம் (வேறுவாக்யத்தை இடையே வைத்துக்கூறுதல்), 9. பின்னலிங்கம் (பால்மாறுபடக்கூறுதல்), 10. பின்னவசனம் (ஒருமையும் பன்மையும் மயக்கக்கூறுதல்), 11. நியூனோபமை (குறையுவமை), 12. அதிகோபமை (மிகையுவமை), 13. பக்னச்சந்தம் (யாப்புவழு), 14. பக்னயதி (யதிவழு), 15. அசரீரம் (வினைச்சொன்முதலிய பயனிலையின்றிக்கூறுதல்), 16. அரீதிமத் (வசனநடை தவறக்கூறுதல்): என்னும் இவை பதினாறும் வாக்கியத்தின்கட்படும் பெருங்குற்றங்களாகக் கூறப்படும்.

அதைஷாம் லக்ஷ்ம ஸம்க்ஷேபாத் ஸநிதர்ஶநமுச்யதே ॥ ௨௰ ॥

இனி, இவற்றிற்கு உதாரணங்களுடன் சுருக்கமாக இலக்கணம் கூறப்படுகிறது.

## 1. சப்தஹீனம்.

உச்யதே ஶப்தஹீநம் தத்வாக்யம் யதபஶப்தவத் ।

வழுவியசொல்லுடன்கூடிய வாக்கியம் சப்தஹீனம் (வழூஉச்சொற்புணர்த்தல்) என்று சொல்லப்படும்.

உதாரணம்:—

நீரந்த்ரம் ப்ரஹதவதி க்ஷயம் வ்யூடேத்க
பூதாநாமதிபதிநா ஶிலாவிதாநே ।
பார்ஷ்ணீ கநகஶிலாநிபம் புஜாப்யா
ஆஜக்நே விஷமவிலோசநஸ்ய வக்ஷ: ॥

பூதங்களுக்குப்பதியான பரமசிவனால் அர்ஜுனனுடைய கல்லாலான கவசமானது அம்புகளால் இடைவெளியின்றாகத் தகர்க்கப்பட்டபோது, அவன் முக்கண்ணனுடைய பொற்பாறை போன்ற மார்பில் தன் இருகைகளாலும் அறைந்தான்.

ஒருவன் தன்னையே அறைந்துகொள்வதாகக் குறிப்பிடுமிடத்தில் "ஹந்" தாதுவிற்கு ஆத்மநேபதம் (தன்பொருட்டுப்பதம்) விதிக்கப்பெற்றுள்ளது. மற்ற இடங்களில் அத்தாதுவிற்குப் பரஸ்மைபதம் (பிறன்பொருட்டுப்பதம்) மாத்திரமே உள்ளதாகும். இங்கு அருச்சுனன் சிவனை அறைந்தானென்று கூறுமிடத்தில் "ஹந்" தாதுவிற்கு "ஆஜக்நே" என ஆத்மநேபதம் வைத்துக் கூறியது சத்தநூலோடுமாறுபடுதலால் அது, வழுவியசொல்லேயாம். இன்னும், "க்தவது" என்னும் விகுதிகொண்ட "ஹதவதி"

எனும் சொல்லுக்கு "க்ஷயம்" என்னும் செயப்படுபொருள்தந்து கூறியதும் அந்நூல்விதிக்கு மாறுதலால் வழுவாம். இவ்விருவழுக்களும் வந்தமையால் இந்தச் சுலோகம் "சத்தஹீநம்" என்னும் குற்றமுள்ளதாயிற்று.

## 2. கிரமப்பிரஷ்டம்.

க்ரமப்ரஷ்டம் பவேதர்த: ஶப்தோ வா யத்ர நக்ரம: ॥ ௨௧ ॥

பொருள்பற்றிய முறையாவது சொற்பற்றிய முறையாவது எங்கே தவறியிருக்கிறதோ அது கிரமப்பிரஷ்டம் (முறைகெடக் கூறுதல்) என்னும் குற்றமுள்ளதாம்.

உதாரணம்:—

துரங்கமத மாதங்கம் ப்ரயச்சாஸ்மை மதாலஸம் ।
காந்திப்ரதாபௌ பவத: ஸூர்யாசந்த்ரமஸோ: ஸமௌ ॥

இவனுக்குக் குதிரையையாவது மதங்கொண்ட யானையையாவது கொடு; (இவனுடைய) ஒளியும் பிரதாபமும் சூரியனையும் சந்திரனையும் போன்றுள்ளன.

இங்கே யானையையாவது குதிரையையாவது கொடு என்றும், ஒளியும் பிரதாபமும் சந்திரனையும் சூரியனையும் போன்றுள்ளன என்றும் கூறுதல், முறையே பொருள்பற்றியமுறையும் சொற்பற்றியமுறையுமாகும். அம்முறை பிறழக்கூறினமையால் இது கிரமப்பிரஷ்டம் (முறைகெடக்கூறுதல்) ஆயிற்று.

## 3. விஸந்தி.

விஸம்ஹிதோ விருத்தோ வா யஸ்ய ஸந்திர்விஸந்தி தத் ।

புணர்ச்சிவிதிசெய்யப்பெறாததும் புணர்ச்சியிலக்கணத்துக்கு மாறாகப் புணர்க்கப்பெறுவதும் விஸந்தி (புணர்ச்சிவழு) எனப்படும்.

உதாரணம்:—

மேவாத்ரியே அம்நா வனஸ்தலீந்ரீகா நமே ।
மஞ்ஜர்யுத்கமஹாரீபிஸ் தருவ்ராதைர் விராஜதே ॥

இந்த மலைக்கானகத்தில் வெளிவரக்கூடிய பூங்கொத்துக்களை உள்ளேயுடைய மரங்கள் நிறைந்த இடமே விளங்குகின்றது.

இங்கே "மேவாத்ரியே + அம்நா" என்பதில் தீர்க்கஸந்தி காரியம் செய்யப்படாமையாலும், "மஞ்ஜர்யுத்கமஹாரீபிஸ்" "தருவ்ராதைர்" என்புழிவேண்டப்படாத இன்னோசைத்தாகச் சந்திகார்யம் செய்யப்பட்டமையாலும் இது விஸந்தி என்னும் குற்றமுள்ளதாம்.

## 4. புனருக்திமத்.

யத்ர யத்ராபி ஸப்தோ(அ)ர்த்தோ வா த்விருச்யதே ॥ உஉ ॥

எவ்விடத்தில் சொல்லேனும், பொருளேனும் வேறுபாடின்றி மறித்தும் கூறப்படுகின்றதோ அது, புநருக்திமத் (கூறியதுகூறல்) எனப்படும்.

உதாரணம்:—

உத்காநுந்மநயந்த்யேதே கம்பீராஸ்ஸ்தநயித்நவ: ।
ஸம்மோஹயந்த்யாஸ்துபிஸ்வநதோ கம்பீராஸ்ஸ்தநயித்நவ: ॥

இந்த கெம்பீரமான மேகங்கள் மிக்க காதல் மோஹங்கொண்டவர்களை மோஹங்கொண்டவர்களாகச்செய்கின்றன; மின்னல்களுடன்கூடிய முகில்களும் இடிக்கின்ற மேகங்களும் அங்ஙனமே செய்கின்றன.

இங்கே, "உத்காந்" "உந்மநயந்தி" என்பது பொருளில்வந்த கூறியது கூறல். "கம்பீரா:" "ஸ்தநயித்நவ:' என்று ஈரிடத்து வந்தது சொல்லில்வந்த கூறியதுகூறல்.

## 5. வியாகீர்ணம்.

வ்யாகீர்ணம் தத்விபக்த்யாத்யா யஸ்மிந் விபக்தீநாமஸம்ஸ்திதி: ।

எங்கு வேற்றுமையுருபுகள் நெறிபிறழ்ந்துவந்தனவோ, அவ்வாக்கியம் வியாகீர்ணம் (வேற்றுமைமாருட்டம்) எனும் குற்றமுள்ளதாம்.

உதாரணம்:—

த்ருத்வா சும்பதி வல்கூக்த்யா ஹம்ஸ: கமலகண்டகே ।
அம்போருஹாஸ்யம் க்ஷிப்த்வா ஸ்வாங்காநி வக்த்ரயந் ॥

அன்னமானது, இனிதாக மிழற்றிக்கொண்டும், காடுமுரடான தாமரைத்தண்டில் தன் உறுப்புக்களை அணைத்துக்கொண்டும், தாமரையின்முகத்தை முத்தமிடுகிறது.

இங்கே, "கமலகண்டகே த்ருத்வா ஸ்வாங்காநி வக்த்ரயந் ஹம்ஸ: வல்கூக்த்யா அம்போருஹாஸ்யம் சும்பதி" என்று வேற்றுமைகளை முறைப்படுத்திக் கூறலே தகுதியாயிருப்ப, அம்முறையிற் கூறாது வேற்றுமையேற்றபெயர்களை மாற்றிக்கூறியதால் இவ்வாக்கியம் வேற்றுமையுருபுமாருட்டம் என்னும் குற்றமுள்ளதாயிற்று.

## 6. வாக்யஸங்கீர்ணம்.

வாக்யாந்தரபதைர்மிஶ்ரம் ஸங்கீர்ணமிதி தத்விது: ॥ ௨௩ ॥

ஒருவாக்கியத்தின்சொல் மற்றொருவாக்கியத்திற்குரிய சொற்களோடு நிலைமாற்றமடைந்துநிற்குமாறு கூறுவது வாக்யஸங்கீர்ணம் எனப் புலவர் அறிவார்கள்.

உதாரணம்:—

காகம் வாதயதி க்ஷாமித: க்ரோஶம் ஜுஹோதி நிஷ்டுரம்ராஷ்ட்ர: ।
ஶ்வாநம் க்ருஹ்ணாதி கண்டே ஹக்காரயதி நக்ராரம் ஸுவிர: ॥

கிழவன், பசியுடையவனாய் வற்றலைத் தின்னுகிறான்; காக்கையை ஓட்டுகிறான்; நாயைச் சினந்து அச்சுறுத்துகிறான்; பேரனைக் கழுத்திற்பிடித்துக்கொள்ளுகிறான்.

இங்கே, "க்ஷீரம் வாத்தி; காகம் க்ஷிபதி; ஶ்வாநம் பீஷயதே; கண்டே நந்தநம் க்ருஹ்ணாதி;" என்று கூறவேண்டிய சொன் முறையைமாற்றி, ஒருவாக்கியத்தின்சொல் மற்றொருவாக்கியத்தினுள் நுழைக்கப்பட்டிருத்தலால் இது வாக்யஸங்கீர்ணம் எனப்படும்.

## 7. அபதம்.

விபிந்நப்ரக்ருதிஸ்தாதிபதயோகாதபதம் விது:।

'பிரகிருதிஸ்தம்' முதலிய அறுவகைப்பட்ட பதங்களை ஒருநெறிப்பாடின்றிப் பலவும் மயங்கிக்கிடக்குமாறு வழங்குதலை 'அபதம்' எனப் புலவர் அறிவர்.

உதாரணம்:—

ஆஹூய பீட்யதே யாக்காரோ நாதி மே ஸதத்ர।
ப்ரேக்ஷந்தே ராஜபுருஷா: ஹா ஹா கஸ்யாக்ரந்தாமி॥

அழைக்கப்பெற்று என்கணவன் நாய்போலத் துன்புறுத்தப்படுகின்றான்; அரசன் வேலையாட்களே பார்த்துக்கொண்டிருக்கின்றனர்; ஐயோ! நான் யாரிடம் முறையிடுவேன்?

இங்கே பிரகிருதிஸ்தம் முதலிய பதவகைகள் ஒருநெறிப்பட வழங்கப்படாது மயங்கிக்கிடக்குமாறு வழங்கப்படுதலால் இது 'அபதம்' எனப்பட்டது.

[தொடரும்.]

V. S. ராமஸ்வாமிசாஸ்திரி, B.A., B.L.,
மதுரை.

# மதிப்புரை.

பாரதயாத்திரை (வடஇந்தியா):—மக்கட்கு அறிவு பள்ளிகளிற் பயில்வதனால்மட்டும் நிரம்பாது; பெரியோர் பலரிடத்தும் பலகாலும் அடுத்துக்கேட்டலாலும் உலகானுபவத்தாலுமே நிரம்பும். கல்வியறிவினும் கேள்வியறிவு சிறந்தது. திருவள்ளுவரும் இது கருதியே 'கற்றிலனாயினுங் கேட்க' என்றார். 'கற்றல்கேட்டலுடையார் பெரியார்' என்றார் கவுணியர்பெருமானும். இக்கேள்வியறிவும் உலகானுபவமும் தீர்த்தயாத்திரை தலயாத்திரை முதலியவற்றால் எளிதில் அடையத்தக்கன. அன்றியும், பரலோகசாதனமான மெய்யறிவும் அவற்றாற்கிட்டுமென்பது, 'மூர்த்தி தலந் தீர்த்தம் முறையாத் தொழுமவர்க்கு-வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே' என்று தாயுமானார் கூறுதலானும் விளங்கும். மூர்த்தி தலம் தீர்த்தங்கள் வடநாட்டும் தென்னாட்டும் மலிந்துள்ளன. அவற்றுள் இந்நூல், வடநாட்டுள்ள மூர்த்தி தலம் தீர்த்தங்களையும் பிறவற்றையும் நன்குவிளக்குவது; அழகிய சித்திரபத்திரங்களுடன்கூடியது; யாத்திரை செல்வோர்க்கும் பிறர்க்கும் மிகவும் பயன்படத்தக்கது.

இதன் ஆக்கியோர் ஸ்ரீ. க. க்ரு. பாரத்வாஜர் என்பார்; அநுவாதி, பங்களூர் அரசாங்க உயர்தரப்பள்ளி ஸ்ரீ. பு. கோ. ஸ்ரீநிவாசன் B. SC. என்பார்; பிரசுரித்தோர் சென்னை எஸ்ப்ளனேட் 366 நிர் கட்டிடத்தில் உள்ள பாரதயாத்ரிகசங்கத்தார். வேண்டுவோர் ஷை பாரதயாத்ரிகசங்கத்தார்க்கு எழுதி இதன் விலைவிவரம் முதலியன தெரிந்து கொள்க.

தமிழர் திருமணநூல்:—இது, திருவாளர் வித்துவான் மா. இராசமாணிக்கம்பிள்ளையவர்களால் அகநானூற்றுச் செய்யுள்களிற்கூறிய முறையைத்தழுவி யெழுதப்பட்டது; தமிழர் மணமுறையை உரைப்பது; பல தமிழறிஞர் கருத்துக்களுடன்கூடியது; சென்னையிலுள்ள தமிழர் நல்வாழ்க்கைக்கழகத்தாரால் வெளியிடப்பட்டது. இதில் தமிழர்மணமுறையைத் தமிழ்மரபுக்கிசையவும் சங்கத் தமிழ்நூல்களிற்காணும் முறைக்கிசையவும் வகுத்துக்கொள்ள முயன்றிருப்பது பாராட்டத்தக்கது. இதன்விலை அணா ஒன்று. வேண்டுவோர் சென்னை, தியாகராயநகர், நாஞராவ் நாயுடுதெருவிலுள்ள திரு. க. சோமசுந்தரம் அவர்களிடம் பெறலாம்.

ஞானசம்பந்தர் நவமணிமாலையும், ஆவினன்குடியந்தாதியும்:— இவை, தேவகோட்டை 'பாலகவி' வயிநாகரம். வே. இராமநாதன் செட்டியாரவர்களால் இயற்றப்பெற்றவை; சொன்னலன் பொருணலன் முதலிய பலவகை நலனும் பத்திச்சுவையும் அமைந்தவை; இவற்றால், செட்டியாரவர்களுடைய தெய்வங்கொள்கை முதலிய உயர்குணங்களும் பலவேறுவகையான கவிகளியற்றும் ஆற்றலும் நன்குபுலனும். இவற்றுள், ஞானசம்பந்தர்நவமணிமாலை சமய குரவருள் ஒருவராகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் விஷயமாக இயற்றப்பட்டது. ஆவினன்குடியந்தாதி பழநிக்குமரவேள் விஷயமாக இயற்றப்பட்டது. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

உ

தமிழ்த்தாய் வாழ்க.

## கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சை.

# இருபத்தெட்டாவது ஆண்டுவிழா.

அன்புடையீர்,

தமிழன்னையினருளால், நிகழும் பிரமாதியாண்டு, ஆவணித் திங்கள் ௩, ௪ (19, 20—8—39) ஆகிய சனி, ஞாயிறுகளில் நமது சங்கத்தின் உ௰அ-வது ஆண்டுவிழா, யாழ்ப்பாணத்து, பரமேசுவரர் கல்லூரி முதல்வரும், ஈழத்து அரசவை உறுப்பினரும் ஆய திருவாளர், சு. நடேசபிள்ளையவர்கள், (B.A., B.L.) தலைமையில், கரந்தைத் தமிழ்ப்பெருமன்றத்தில் நிகழ்ச்சிநிரலிற் காணுமாறு நிகழும்.

தாங்கள் தமிழன்பர் பலருடன் வந்திருந்து, விழாவினைச் சிறப்பிக்க விரும்புகின்றேன்.

க. த. சங்கம், தஞ்சை
பிரமாதி—ஆடி—௰அ

தங்கள் அன்புள்ள,
த. வே. உமாமகேசுவரன்,
சங்கத்தலைவர்.

உ

தமிழ்த்தாய் வாழ்க.

# கரந்தைத் தமிழ்ச்சங்கத்து உ௰அ-வது ஆண்டுவிழாவினது முதல்நாள் நிகழ்ச்சி.

## பிரமாதி, ஆவணி ௩ (19-8-39) சனி

தொடக்கம்

பிற்பகல் உஉ॥ நாழிகை (மணி 3)

க. கடவுள்வணக்கம், தமிழன்னைவாழ்த்து.

உ. தலைவரவர்களை வரவேற்றல்.

௩. அறிக்கைபடித்தல்.

௪. தலைவர் முன்னுரை.

௫. (அ) தொல்காப்பியமும் சங்கநூல்களும்

திரு. வித்துவான், மா. இராசமாணிக்கம் அவர்கள் (B.O.L.) தமிழாசிரியர், முத்தியால்பேட்டை உயர்தரக்கல்விக் கூடம், சென்னை.

(ஆ) கலித்தொகை

திரு. கரந்தைக்கவியரசு, R. வேங்கடாசலம்பிள்ளை அவர்கள், தமிழ்ப்பேராசிரியர், அரசர்கல்லூரி, திருவையாறு.

(இ) சிவஞானமுனிவர்

திரு. பண்டிதமணி. மு. கதிரேசச்செட்டியாரவர்கள், தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைப்பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.

௬. தலைவர் பின்னுரை.

எ. வாழ்த்து.

உ

தமிழ்த்தாய் வாழ்க.

# கரந்தைத் தமிழ்ச்சங்கத்து உயிஅ-வது ஆண்டுவிழாவினது இரண்டாம்நாள் நிகழ்ச்சி.

## பிரமாதி, ஆவணி, ௪ (20—8—39) ஞாயிறு.

### தொடக்கம்

பிற்பகல் உஉ௦ நாழிகை (மணி 3)

க. கடவுள்வணக்கம், தமிழன்னைவாழ்த்து.

உ. மாணவர்க்குப் பரிசுவழங்கல்.

ங. (அ) **பண்டைத் தமிழர் அரசியற் கருத்துக்கள்.**

திரு. ச. க. கோவிந்தசாமிப்பிள்ளையவர்கள், (M.A.) வரலாற்று விரிவுரையாளர், அண்ணாமலைப்பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.

(ஆ) **வினையுணர்வும் ஞானசம்பந்தரும்.**

திரு. வித்துவான், ஔவை. சு. துரைசாமிப்பிள்ளையவர்கள், தலைமைத்தமிழாசிரியர், மகாநாட்டுக்கழக உயர்தரக் கல்விக்கூடம், போளூர்.

(இ) **குமரகுருபரர்.**

திரு. பண்டித. ந. மு. வேங்கடசாமிநாட்டார் அவர்கள், தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப்பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.

ச. தலைவர் முடிப்புரை.

ரு. நன்றிகூறல்; வாழ்த்து.

13 ஆண்டென்றது கொல்லமாண்டினை. எழுநூற்றிருபான்மூன்று - எழுநூற்றிருபத்துமூன்று. எட்டில் - எட்டாந்திகதியில். முகுத்தம் - முகூர்த்தம். மகரமுகுத்தம் - மகரலக்கினம். சுருதி - வேதம். மிருதி - ஸ்மிருதி. இதனால் இந்நூல் அரங்கேறிய காலமும் களனும் உணர்த்தப்பட்டன.

14 அந்த - பண்டறிசுட்டு. வான்புனல் - பெரியநீர் - மகாப்பிரளய காலவெள்ளம். முந்தநாளையின் - முன்னாளில்; ஐ சாரியை. மறித்தும் - மீட்டும். வேதியன்றனை - பிரமனை; தன் சாரியை. முதலோன் - (எல்லாவற்றிற்கும்) வித்தாக விளங்கும் திருமால். வாய்மை - உண்மை. சகம் - உலகம். அயன் - பிரமன்.

15 கனிவினால் - அன்புடன் அல்லது இரக்கத்துடன். அவன் - பிரமன். ஒரு பெருங் கடவுள் - திருமால். ஒரு பெருங்கடவுள் கனிவினால் அவன் வெளியில்வந்து எனக் கூட்டுக. அவன் வெளியில்வந்து - அவனிடத்தெதிர்ப்பட்டு. 'குருகாபுரிவருக' என்றது திருமால் கூற்று. புனிதனை - திருமாலை. சதுமுகன் - நான்குமுகங்களையுடைய பிரமன். அவண் - குருகாபுரியில். துனி - அச்சம். துனிசெய் - அஞ்சிய. தாந்தன் - பூர்வஜன்மத்தில் வடநாட்டுப்பார்ப்பானாயிருந்து ஒரு பெரியார் சாபத்தால் மறுபிறப்பில் நான்காம் வருணத்திற் பிறந்து குருகூரையடைந்து ஆதிநாதனை வழிபட்டு முத்திபெற்றவன். இவன் சரிதவிரிவை இந்நூலின் 17-வது சருக்கத்துக் காண்க. எந்தை - எம்முடைய தந்தையாகிய திருமால். வீடு - பரமபதம்.

16 வழா - வழுவாத - தவறாத; நந்து - சங்கு. அது, இங்கே (சலஞ்சல உருவினனான) சங்கமுனிவனையுணர்த்தும். இவன் முன்ஜன்மத்தில் வடநாட்டில் வேடனாய்ப்பிறந்து, தாந்தமுனிவனடித்துகள் முடிமீது படியப்பெற்ற பேற்றால் மறுபிறப்பில் வேதியனாகித் திக்குப்பாலகரெண்மர்க்கும் மேலாம்பதவிவிழைந்து மகாமேருவில் முக்கடவுளரையும் நினைந்து தவம் புரியுங்கால் நாரதனால் சங்காகும்படி சபிக்கப்பட்டுக் குருகூரையடைந்து ஆதிநாதனை வலம்வந்து வழிபட்டு முத்திபெற்றவன். இவன் சரிதவிரிவைப் பின்வரும் 18-ஆம் பாடலாலும் இந்நூலின் 18-வது சங்கன்முத்திபெற்ற சருக்கத்தாலும் அறியலாம். இனத்தொடு - வலம்புரி இடம்புரி முதலிய சங்கக்கூட்டங்களுடன்.

17 மும்மதம் - கன்னமதம், கைமதம், கோசமதம் என்பன. உரவோர் - (தத்துவ) ஞானமுடைய முனிவரர். அழுக்கிலான் - குற்றமற்றவனான வசிட்டன். உபயதானம் - இரண்டுதலம். அவை, ஆதிக்ஷேத்திரம், வராகக்ஷேத்திரம் என்பவை. விழுத்தவம் - சிறந்ததவம். சலஞ்சலம் - வலம்புரியாயிரஞ் சூழ்ந்த சங்கு.

18 உம்பர்கோன் முதலாய எண்மர் - இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்போர். இவர்கள் முறையே கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு என்னும் திசைகளைப் புரப்பவராவர். உயர்வுறுவான்- உயர்வடையும்பொருட்டு. வேதியன் - சங்கமுனிவன். வாரிதி - கடல்.

19 மும்மையாம் உகம் - (கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம் என்று வழங்கும்) மூன்றுகம். முதலும் - தொடங்கும். பச்சைமால் - பசிய நிறமுடைய திருமால். காரியார்சேய் - காரியாருடைய திருமகன்—சடகோபர். 'புகழ்வாம்' என்றிருப்பதைப் 'புகழ்வான்' என்று திருத்திக்கொள்க. புகழ்வான் - புகழும்பொருட்டு. பச்சைமால், நம்மை நாம் புகழ்வான் வருகுவமென நவின்று சடகோபனுமியல்பும் என முடிக்க.

20 நால்வகைப்பனுவல் - (திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி யென்னும்) நான்குவகையான நூல்கள். நாதனாகிய சுடர் - ஸர்வேசுவரனாகிய ஒளி - பரஞ்சோதி - திருமால். பதின்மர் - பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார் (சடகோபர்), குலசேகராழ்வார், பெரியாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார்: என்போர்.

21 திருமகள் - இலக்குமி. புவிமகள் - பூமிதேவி. பொதுவர்குலமகள் - இடையர்குலமகளாகிய நீளை. திருமகள், பூமி, நீளை யென்னும் மூவரும் திருமாலின் தேவியர். பொதுவர் - இடையர். புத்தேளிர் - தேவர். மகரம் - மீன். புண்டரீகப்பெருமகன் - தாமரைமலரில் வீற்றிருக்கும் பெரியோனாகிய பிரமன்.

22 தொழுதி - கூட்டம். வரி - கீற்று. அளி - வண்டு. தவளமலர்மகள் - வெண்டாமரைப்பூவில் வீற்றிருக்கும் கலைமகள். கோயில் என்பது அரங்கத்தையுணர்த்துதல்போல மலர் என்பது தாமரையை யுணர்த்திற்று. திருவழுதிவளநாடு என்பது குருகூருள்ள நாட்டின்பெயர்.

23 இச்செய்யுள்முதல் திருவழுதிவளநாட்டின் சிறப்புக் கூறப்படுகிறது. இது, 'தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச் - செல்வருஞ் சேர்வது நாடு' என்னுந் திருக்குறட்கருத்தமைந்தது. இதனுள், விளையுள் - விளைநிலம். நவை - குற்றம். வித்தி - விதைத்து. களைகண் - காப்பு. 'ஏரினும் நன்றா லெருவிடுதல் கட்டபின் - நீரினும் நன்றதன் காப்பு' என்பது திருக்குறள். பயன்விளைப்பவர் - உழவர். கற்றோர் - கல்வியறிவொழுக்கங்களானுயர்ந்த அறவோர், அந்தணர், துறந்தோர் முதலாயினோர். கற்றோர்

என்பது மத்திமதீபமாய்ப் பின்னுள்ள கிளைசெய் தொல்குலம் என்பதனோடும் இயைந்து கற்றோர்கிளைசெய் தொல்குலம் என நின்றது. கிளை - கூட்டம். தொல்குலம் - பழங்குடி. எதிர்ந்து - எதிர்கொண்டு. எதிர்ந்து, மலர்த்திய என இயையும். மண்கிளைத்து வளையும் ஆதுலர் என்றது இரவலர் இரக்குங்கால் நாணிநிற்கும்நிலைவிளங்கக் கூறியவாறு. மண்கிளைத்து - பூமியைக் (கால்விரலாற்) கிண்டி. ஏ - அசை. வளையும்-வளைந்த - கீழ்நோக்கிய. ஆதுலர் - இரவலர். கொடைவளத்தார் (-செல்வர்) என்றது கலத்தினும் காலினும் அரும்பொருள்தரும் வணிகரை. பயன்விளைப்பவர் (உழவர்) பலர்; அவரினுங் கற்றோர் பலர்; அவரினுங் கொடைவளத்தார் பலர். என்க. பயன்விளைப்போருள்ளும் கற்றோர் பலர்; கற்றோருள்ளும் கொடைவளத்தார் பலர்: எனலுமாம். பலர் - எண்ணிறந்தோர். இதனால் அரசனுக்கும் வாழ்வார்க்கும் பொருள்வாய்த்தல் பெறப்பட்டது.

24 அந்தணாளரை முதலியோர் - அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்போர். வாய்மை - சத்தியம். கூர்தல் - மிகுதல், விரும்புதல். உய்ந்த- தவறின்றிமேம்பட்ட. உறுப்பெரும்பெயல்போல் வந்தறுது என்பதனை உறுப்பெயல் வந்தறுது, பெரும்பெயல் வந்தறுது எனப் பிரித்துக்கூட்டுக. போல் உரையசை. பெயல் - மழை. உறுப்பெயல்வந்து அறுது - மழையின்மை (-அநாவிருஷ்டி) யுண்டாய் அழியாமல். பெரும்பெயல் வந்து அறுது - மிக்கமழை (-அதிவிருஷ்டி) யுண்டாய் அழியாமல். எதிர் - (எக்காலத்தும்) வருகின்ற. மூவகைப்புனல் - கீழ்நீர், மேனீர், மலையருவிநீர் என்பன. கீழ்நீர் - தூரவு கேணிகளில் ஊறுநீர். மேனீர் - ஏரிகளில் பெருகிய மழைநீர். மலையருவிநீர் - ஆறுகள். இதனை, 'இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்'* என்பதனுன் அறிக. எவ்வளனும் - வளன் எவையும் - எல்லா வளங்களையும். ஏனைநாட்டவர் - அயல்நாட்டாரும். உம்மை செய்யுள்விகாரத்தாற்றொக்கது. விழைதகைத்து - விரும்புந்தன்மையுடைத்து. 'பெரும் பொருளாற் பெட்டக்கதாகி யருங்கேட்டால் - ஆற்ற விளைவது நாடு' என்னும் குறளும் அதற்குப் பரிமேலழகரெழுதியவுரையும் இங்கு நோக்கத்தகும்.

25 மாரி - மழை. கழனி - மருதநிலம். தடம் - தடாகம். மதி - சந்திரன். அகடு - வயிறு. உரிஞ்சுதல் - உராய்தல். மேய - மேவிய. மால்வரைக்குலம் - பெரிய மலைகளின்கூட்டம். சுலாய - வளைந்த. இது, 'இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும் - வல்லரணும் நாட்டிற் குறுப்பு' என்னுந் திருக்குறட்கருத்தமைந்தது. இதனால் திருவழுதிவளநாட்டின் அவயவங் கூறப்பட்டது. ஆற்றுநீரும், மாரிநீரும், ஊற்றுநீரும் தடாகமும், மலையும், நகர்களும் உறுப்புக்க (அவயவங்க)ளாம்.

* திருக்குறள். 737.

26 வாய்மை - சத்தியம். ஒப்புரவு - உலகநடையறிதல். வேளாண்மை - ஈகை. தாளாண்மை - முயற்சி. புலங்கள் - சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்பன. பொறி - மெய் வாய் கண் மூக்கு செவி மனம் என்பன. புன்புலங்களிற் பொறியுறுப் பொறை - அற்பமான சுவை முதலிய புலன்களிற் செல்லாத பொறியடக்கம். நிறை - ஆடூஉக்குணம் நான்கின் ஒன்று; அது மனத்தினை ஒருவழிப்படுப்பது. புறந்தர - தோற்க. இதனால் திருவழுதிவளநாடு, அன்பு முதலிய உயர்குணம் பலவும், பொறியடக்கமும், நிறையும், கடவுள்வழிபாடும், இன்பவாழ்வும் உடைய மேன்மக்களை உயிராகவுடையதென்பது கூறப்பட்டது.

27 மூர்த்தி - வடிவுடையவனை. திருமால்முதல் முதல்வராம் முதன்மைத் தீர்த்தர் - திருமால் முதலிய தலைமையுடையரான சிறந்த கடவுளர். திருமால்முதல் தீர்த்தர் என்றது திருமால், பிரமன், உருத்திரன் என்பாரை. தீர்த்தர் வாழும் நற்றானம் - கடவுளர் சாந்நித்தியம்செய்தெழுந்தருளியுள்ள சிறந்ததலம். தானம் - கைம்மாறுகருதாது தக்கார்க்கு அளிக்குங் கொடை. கூர்த்த - கூரிய. அணிகிளர் கெழுதகைத்து - அழகால்விளங்குந்தன்மையுடைத்து. ஏ - ஈற்றசை.

28 பரப்பு - பரம்பு - பரவிய; வலித்தல் விகாரம். தடத்து - தடாகத்தில். இரவலர் - இரவில் மலரும் பூக்கள். அப்பரப்பில் - அந்நிலத்தில் (அத் திருவழுதிவளநாட்டில்.) நிரப்பு-வறுமை. இரவலர்-யாசகர். நெறித்து-முறையுடைத்து. இரவின் மலரும் பூக்களையன்றித் திருவழுதிவளநாட்டில் இரவலர் (யாசகர்) இல்லை யென்றபடி. புரப்பதன்றி - கொடுப்பதல்லாமல். கரப்பதாங்குணம் - ஒளிக்குந்தன்மை. நனவு - விழிப்பு.

29 அற்றம் உற்றபோழ்து - சமயம்வாய்த்தபொழுது. ஆறலைக்குநர் - வழிப்பறிசெய்வோர். வேந்தலைப்போர் - வேந்தனைவருத்தும் குறும்பர். உட்பகையதாய் உறைவோர் - உட்பகையாய் உறைவோர். அது பகுதிப் பொருள்விகுதி. உட்பகையாயுறைவோர் கள்வரும் குறளைகூறுவோரும் முதலிய மக்கள். சுற்றமுற்றவுங் குழீஇத் தனிக்குடி துயருழப்பான் செற்றம் வைத் திகல்விளைப்பவர் என்றது சங்கேதவயத்தான் மாறுபட்டுக்கூடும் பல குழுவினரை. சுற்றம் முற்றவும் - இனமுழுவதும். குழீஇ - கூடி. தனிக்குடி - தனித்துவாழுங்குடிகள். துயர்உழப்பான் - துன்புறும்படி. செற்றம் வைத்து - சினங்கொண்டு. இகல் - பகை. செவ்வி - அழகு. இது, 'பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்குங் - கொல்குறும்பு மில்லது நாடு' என்னுந் திருக்குறட் கருத்தமைந்தது. இக்குறளுள் உட்பகையினுளடக்கிக்கூறிய ஆறலைப்போரை அவர்தங்கொடுமைமிகுதிபற்றி இந்நூலாசிரியர் தனியே பிரித்துக்கூறினர்.